www.tamilarangam.net

1995 Sept/Oct vol.2; Nr.8 Sarvadesa Tamiler: ISSN.0805-7443

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity

# சர்வதேசதமிழர்

தமிழர்களை முன்னேற்றும்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை



தமிழ் கடிகாரம் அமைப்பு: ஆர்.முத்துகுமார்,தமிழ்நாடு




டாக்டர்.நரசமம்பா

சர்வதேச தமிழர் வாசகர்கட்கும்!
பாசம் மிக்க என் ரசிகர்களுக்கும்!
என் 1995ம் ஆண்டின்,
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!!
அன்புடன்..................பிரசாந்த்



சிங்கப்பூரின் அழகு!



பிரசாந்த்

உள்ளே:

பாரதியின் பரம்பரை – டாக்டர் வ. மாசிலாமணி,அன்னா பல்கலைக்கழகம்,தமிழ்நாடு.
ஆந்திர பெண்எழுத்தாளர் டாக்டர் நரசமம்பா பேட்டி – முன்னாள் அதிபர் என்ஆர்இலட்சுமணன்
மாஸ்கோவில் எனது மறக்கமுடியாத அனுபவங்கள் – ஆரையம்பதி கசபாரத்தினம்,ரஷ்யா
தென்கிழக்காசிய பயண அனுபவங்கள் – என்எஸ்பிரபு,நோர்வே.
சிறுகதை:எங்களை வாழவிடுங்கள் – பொன்சிவா,ஏகர்சுண்ட்,நோர்வே.
தொடர்கதை:பனிப்பூ க்கள் – காரையூ ரான் இதியாகலிங்கம்,வார்டோ,நோர்வே.
சர்வதேச தமிழர் கவியரங்கம்,சர்வதேச தமிழர் தகவல்சேவை:சுவீடிஷ் பல்கலைக்கழகங்கள்

பிரான்ஸ் தமிழர்கள்
பொன் கலைக்கூடத்தின்
திரைப்படம் – புயல் –



இளங் கீரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733:கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,ஜ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன்ஏககுண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா; வார்டோ:

## வாசகர் களம்

**அன்புடையீர்!**
சர்வதேச தமிழர் சஞ்சிகையைத் தொடர்ந்து படிப்பதுடன்,ரசித்தும் மகிழ்கிறோம்.நன்றிகள் பல!
தென்னாபிரிக்க அனுபவங்கள் பற்றி கூடிய விரைவில் தமிழர்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு என் ஆக்கபூர்வஉதவிகள் என்றுமுண்டு!
சர்வதேசதமிழரில் வரும் கவிதைகள், கட்டுரைகட்கு விசேட பாராட்டுக்கள்!
குறிப்பாக கவிதைப்பகுதியில் வரும் கவிதைகட்கு ஓர் இனம்புரியாத சுவை உண்டு!அவற்றைப் படிக்கும் போது தமிழர்களை அவரவர் மண் வாசனையுடனும்,தமிழ்வாசனையுடனும் ஒன்றிணைத்துவிடும் பாங்கு சிறப்பு!
தமிழ்பேசும்மக்கள் தரமானகவிதைகளையும்,அவற்றை எழுதும் கவிஞர்களையும் ஒருபோதும் மறப்பதில்லை!
சர்வதேச தமிழர் கவியரங்குக்கு மீண்டும் பாராட்டுக்கள்!
சஞ்சிகையின் மற்ற அம்சங்களும் வீறுநடையுடன் திகழ வாழ்த்துக்கள்!
தென்ஆபிரிக்காவிலிருந்து தற்போது பொற்ஸ்வானா வந்துள்ளதால் இங்கிருந்தும் எம் தமிழ்ப்பணி தொடரும்!
சர்வதேச தமிழர் வளர்ச்சி ஓங்குக!!
**திருமதி.கமலா வேலுப்பிள்ளை**
**பொற்ஸ்வானா–ஆபிரிக்கா**

---

**அன்புள்ளம்கொண்ட ஆசிரியருக்கு!**
தாங்கள் மலேசியா வந்திருந்ததை மலேசியநண்பன் பத்திரிகைமூலம் அறிந்து சந்திக்கமுயன்றும், தொடர்பு கொள்ளமுடியாதது கவலை!
தங்கள் முயற்சிக்கு எமது வாழ்த்துக்கள்!ஒன்றுபட்ட தமிழினத்தின் எழுச்சிக்குரல் ஒன்றின் அவசியத்தை இன்று உலகமெங்கும் உள்ள தமிழர்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர்!இதற்கு ஓர் அமைப்புரீதியான வடிவம் கொடுக்க நாம் முயலவேண்டும்!
சர்வதேசதமிழர் சஞ்சிகைக்கு எத்தகைய முயற்சிகள் மலேசியாவிலிருந்து தேவையோ,அதனைச்செய்து தரத் தயாராக உள்ளோம்!இங்கிருந்து ஆக்கங்களும் அனுப்பலாம்!வாழ்த்துக்கள்!
**கணபதி கணேசன்–கலாங்,மலேசியா**

---

**மதிப்பிற்குரிய ஐயா!**
சர்வதேச தமிழர் இதழ் கண்டேன்!
மிகவும் சிறப்பாக இருக்கிறதுஉலகத் தமிழருக்கான இப்பணி பாராட்டுக்குரியது.நாம் வைகைகுயில் எனும் சிற்றிதழ் நடத்திவருகிறோம்.அத்துடன் ஏழைமக்களுக்காக சிற்றிதழ் சேவை மையம் நடாத்துகிறோம்.தங்கள் இதழ் கிடைப்பின் மகிழ்வுறுவோம்!எமக்கு ஒரு பரந்த தொடர்பு கிடைக்கவும், எதிர்கால தமிழ்இலக்கியவளர்ச்சிக்கும், தகவல்சேவை மூலம் உலகத்தமிழர் மிகப்பெரிய பயன்பெறவும் தங்கள்பணி பேருதவிபுரியும். நன்றிகள் பல!
**அ.சரவணகுமார்–உதவி ஆசிரியர்**
**வைகைகுயில்,..................மதுரை–20**
(வைகைகுயில் சஞ்சிகையுடன் சர்வதேச தமிழர்,நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு மேற்கொள்ளும்!..................ஆ–ர்)

---

**அன்புள்ள ஆசிரியருக்கு!**
சர்வதேச தமிழர் பற்றி அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.இச்சஞ்சிகையை தொடர்ந்து பெறவும்,சந்தாதாரராகவும் விரும்புகிறோம்.அதற்கான வழிவகைகளை அறியத்தரவும்.
**எஸ்.கண்ணன்,..................முத்றா,ஓமான்**
(12இதழ்கட்கு 20அமெ.டாலர்,சந்தாவாக ஆசிரியர்பெயருக்கு செக்(அல்லது சமமான கரன்சி)அனுப்பலாம்!ஆ–ர்)

---

**வாழ்க சர்வதேச தமிழர்!!**
சஞ்சிகை ஒன்று கண்டேன்,
பன்சுவை பலவும் அங்கே,
மிஞ்சுகை கண்டு களிப்புற்றேன்!
கொஞ்சுகை கண்டு என்னுள்ளம்
மஞ்சத்தில் ஆடக்கண்டேன்!
கெஞ்சுதலற்று விளம்பரமொன்றுமிலா
கஞ்சிபோல் தமிழமுதம்!
பிஞ்சுகை மழலைபோலே தவழ்ந்திடும்
கவியரங்கு கண்டேன்!
தஞ்சுகை வேண்டுமென்று தமிழர்
தவித்திங்கு வந்திட்டாலும்,
அஞ்சுகையின்றி வாழ, வாஞ்சியாய்
துஞ்சுகையின்றி சர்வ தேசத்தமிழர்
வாழி!
**நாவற்குழி நாகேந்திரன்–லண்டன்**

---

**அன்பின் ஆசிரியருக்கு!**
சர்வதேச தமிழர் சஞ்சிகையை தொடர்ந்து ரசித்துப் படித்து வருகிறோம்!
தங்கள் முயற்சிக்கு பிரான்ஸ் வாழ் தமிழர்கள் சார்பில் பாராட்டுக்கள்!
இங்கு பாரிஸில் ஈழத்தமிழர் ஒன்றிணைந்த முயற்சியால் செப்ரம்பரில் வெளியாகும் பொன் கலைக்கூடத்தின் –புயல்–எனும் திரைப்படம் பற்றி உலகத்தமிழர்க்கு எடுத்துரைக்கவிரும்புகிறேன்.சத்தியகீதை எனும் படத்தை முன்பு தந்த பொன்கலைக்கூடம் தன் அயராதஉழைப்பில் ஈழநிலா இசையில் என்.சிறீதர் ஒளிப்பதிவுஎடிட்டிங், இளங்கீரன்,சுரேந்திரன்,முகத்தார் யேசுரட்ணம் அம்பிகா பேர்ட்டி,இரு பிரெஞ்சுநடிகைகள்,பல புதுமுகங்களின் நடிப்பில் இந்தப்படத்தைத் தந்துள்ளது இப்படத்தின் வெற்றிக்கு உலகத்தமிழர் ஆதரவு தரும்படி சர்வதேசதமிழர் மூலம் வேண்டுகோள் விடுக்கிறோம்!
**இ.கிருபானந்தன்- 101 Impasse Fiocre,94700 Maisonsalfort,France**

## தமிழ்நாட்டுக் கடிதம்:

**அன்பு நண்பா!**
தமிழ்நாட்டில் அரசியல் புயல் வீச ஆரம்பித்துள்ளது.அதில் அண்டை மாநிலத்திலிருந்து வந்த நடிகரை தமிழகமுதல்வராக்க சில அரசியல் கட்சிகள் துடியாய்த்துடிக்கின்றன!
தமிழர்க்கு அடிவிழுந்த கர்நாடக மாநிலத்திலிருந்து,முன்பு பஸ்நடாத்தினராகப்பணிபுரிந்து பின் சிகரெட் எறிந்து வாயினால் ஏந்திப் பற்றும் சாகசங்களினால் புகழ்பெற்ற நடிகராகிய திரு.ரஜினிகாந்த் அவர்கள் நடிப்புத்துறைக்குச்சேவை செய்வதை நாம் வரவேற்கிறோம்!அவர் கர்நாடக முதல்வராக வருவதை யிட்டும் எமக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை.
ஆனால் தமிழர்களில் படித்தவர்கள்,நல்லவர்கள்,செயல்வீரர்கள் பலர் தமிழ்நாட்டில் இருக்க அதனை விடுத்து,கர்நாடக நடிகரை தமிழக முதல்வராக்க முயலும் அறிவுகெட்டதனத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.
சில நடிக,நடிகையரை முதல்வராக்கிய மாநிலங்கள் பட்டபாடு போதாதா?அவர்கள் வறுமை,அறியாமை,வேலையின்மை,நோய்,சாதி–சமயபேதம்,துன்பம்,வீடின்மை,ஊழல், லஞ்சம்,வன்முறை,பாதுகாப்பின்மை போன்றவற்றை அகற்றுவதை விடுத்து தம்புகழ்பாடும் விளம்பரதாரராயும்,தமக்கும்,உற்றார்–உறவினர்க்கும்,நண்பர்–நண்பிகட்கும் பணம்,சொத்துச் சேர்ப்பவராகவும், தன்காலில் பலதமிழரை விழச்செய்பவராகவும் இருந்ததை தமிழகமக்கள் ஏன் நினைவில் மறுதேர்தல் வரையாவது வைத்திருக்கக் கூடாது?
திரைப்படங்களில் ஏழைகளுக்கு உதவுபவராக நடிப்பவரெல்லாருமே நாட்டையாளத் தகுதியுள்ளவரா?
சினிமாக்கலைஞர்கள் தமிழகமக்களுக்கு சேவைசெய்யட்டும்.ஆனால் எவர் தமிழகமக்களுக்கு குறிப்பாக இளைஞர்,யுவதிகட்கு வேலைவாய்ப்பு,நல்வாழ்வு,நல்லாட்சி தருவர்?
எனக் கருதும் தலைவர்,கட்சிக்கு தங்கள்ஆதரவை அளிப்பதே நீண்டநோக்கில் தமிழ்,தமிழர்க்கு நலம் தரும்.இதற்கு வீரமும்,விவேகமும் உள்ள இளைஞர் ஒன்றிணைக!!!
21ம்நூற்றாண்டில் புதிய தமிழகம்!
**ஜே.ஆர்..............திருச்சி, தமிழ்நாடு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்:போர்லவோக்:இரா.விஜய்:போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் கின்சார்விக்:பா.பாலேந்திரன்:பிறத்வோக்:எஸ்.தங்கராஜா
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.905.0995;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்:மு.ஆறுமுகம் 181.5432126
கிருஷ்ணா வைகுந்தவாசன் 181.542 9787கனடா:பா.சிவலிங்கம்416.4497607;ரி.எஸ்.மூர்த்தி:416.4675723;
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்

**சர்வதேசதமிழர் 1995**
**ஐப்.–கார்த்திகை,தொ–2,இல.8**

---

## ஆசிரியர் கருத்து: தமிழர்களும்,கண்ணிவெடியும்!

தமிழர் வாழ்வில்,குறிப்பாக ஈழத் தமிழர்வாழ்வில் யுத்தமும் புகுந்து கொண்டதுயுத்தத்தில் கண்ணிவெடிகளின் பங்கும் முக்கியமாகிவிட்டது.எல்லைகளைக் காக்கமட்டும் என பயன்பட்ட கண்ணிவெடிகள், எதிரிகளின் கால்களை மட்டுமன்றி அப்பாவி மனிதரின் கால்களைத்துண்டாடி,அவர்களை முடவர்களாக்கவும் தவறவில்லை.குறிப்பாக கண்ணிவெடிகளில் தவறுதலாக கால்களை வைத்து தம் அரிய கால்களை இழந்தோரில் சிறார்களே அதிகம்.

ஆப்கானிஸ்தான்,சோமாலியா,இலங்கை,கம்போடியா, உட்பட பலநாடுகளில் யுத்தப்பகுதிகளில் யுத்தம் முடிந்தாலும் நிலத்தில் கால்களைப்பதிப்பது மிகவும் அபாயகரமான ஒன்றாகவே இருக்கும்.புதைத்த கண்ணிவெடிகளின் இருப்பிடம் பற்றிய வரைபடம் இருந்தால் அகற்றுவது சுலபம்.அது இலகுவான ஒன்றல்ல.வரைபடமும், அதனை வரைந்தவரையும் கண்டுபிடிப்பதும் கடினமான காரியமே!

மேற்கு நாடுகளே வழமைபோல் கண்ணிவெடி உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன.அதுமட்டுமன்றி புதைக்கப்பட்ட,கண்ணிவெடிகளை பின்பு அகற்றுவதற்கு கருவிகளையும்,வல்லுனர்களையும் கூட ஏற்றுமதி செய்வதில் அவர்கள் புலிகள்!.

இந்தஉலகில் மதிகெட்ட அரசியல்வாதிகளும்,யுத்தவெறிபிடித்தவர்களும்,புத்தியுள்ள ஆயுதவியாபாரிகளும், விடயம்புரியாத அப்பாவிமக்களும், அரசியல்,பொருளாதாரஏற்றத்தாழ்வும்,இருக்கும் வரை கண்ணிவெடிகளின் அட்டகாசம் தொடரும்.

மனிதாபிமானமற்ற இந்த,கண்ணிவெடிகளின் உற்பத்தியை உடனே நிறுத்தும்படி ஐ.நா.சபை சகல நாடுகளையும் கேட்டுள்ளது.அணுகுண்டை வெடித்து உலகமக்களின் தீராதவெறுப்பை தேடிக்கொண்ட பிரான்ஸ்,எலக்ரோனிக்கருவியாலும் கண்டுபிடிக்கமுடியாத பிளாஸ்ரிக் கண்ணிவெடியை ஏற்றுமதி செய்யும் டென்மார்க் போன்ற நாடுகள் மனிதசமூகத்திற்கே எதிரிகள்!

## சிந்தனைத்தடாகம்

---

பிறர்செய்கை எனக்கு ஏற்படுத்தும் பாதிப்புத்தானே கோபம்!பாதிப்பு என்பதை ஏற்படுத்திக்கொண்டது நான்தானே!ஆகவே கோபத்திற்கு காரணம் பிறர் அல்ல!
–ஜே.கிருஷ்ணமூர்த்தி
(தகவல்:வல்வை பா.பாலேந்திரன்)

---

## புதிய –இயற்கைவிதி கட்சியின் துண்டுப்பிரசுரத்திலிருந்து......!

இயற்கைவிதி கட்சி,இயற்கையின் புத்திசாலித்தனத்தை அரசியலில் புகுத்தும் நோக்கில் உருவானது. மனிதரால் தீர்க்கமுடியாத பிரச்சனைக்கு இயற்கைதரும் தீர்வே சிறப்பானது.

விஞ்ஞானவிதிகளின் அடிப்படையில் இக்கட்சி இயங்குவதே மற்ற கட்சிகளுடனான அடிப்படை வேறுபாடு.

தனிமனிதரின் உள்ளுணர்வு,அவர் சிந்தனை,செயற்பாட்டை இயக்கும். அதேபோல் சமுதாயத்தையும் இத்தகைய சமுதாய கூட்டு உள்ளுணர்வு முன்னேற்றும்.

தனியான,கூட்டு உள்ளுணர்வுகள் ஒன்றிலொன்று தாக்கம்,ஏற்படுத்தும் மனிதரின் உடல்,உள அமைதியீனம் போக்க யோகமுறைகள் அறிமுகமாகும்.இதனால் சமூகத்தில் நோய்,வன்முறைகள் குறையும். தியானமுறைகளும் அறிமுகமாகும். மனிதரின் ஆக்கஉணர்வு,ஆர்வம் துணிவு,பண்பாடு வளர்ப்பதாலும், தீர்மானம் எடுப்பது இலகு!

அதீத தியானம்,யோகப்பறப்பு உள்ளுணர்வுகளை தட்டிஎழுப்பும். மக்களின் மூளைவளம் பெருக, பொருளாதாரவளம் உயர, வேலைவாய்ப்பு,நல்வாழ்வு உயரும்.

அரச நிர்வாகச்செலவுகள்,தேவையற்ற நாட்டுப்பிரச்சனைகளின் வீண் விரயம் நன்கு குறைக்கப்படும்.வரிபடிப்படியாக குறைக்கப்படும்.

உடல்,உள,சமூகஆரோக்கியம்,பிரச்சன் வருமுன்பே பேணப்படும். இதனால் துன்பம்,செலவு முதலே தவிர்க்கப்படும்.மகரிசி மகேஷ்யோகியின் ஆயுர்வேதஇயற்கை மருத்துவ முறைகள் முதலே துன்பம்,நோய்களை தடுக்கும் ஒன்றாகும். நீண்டநோக்கில் நோயற்ற ஒரு,சமுதாயத்தை உருவாக்க,பாடசாலைகளில்–முதலே,நோய்தடுப்பு– பற்றிய கல்வி கற்பிக்கப்படும்.

சகலஅரசியல் பிரச்சனைகளும்,சரியானகல்விமுறைமூலம் தீர்க்கப்படலாம் என்பது எம்கருத்து! மனிதர்களில் பலர் தமது ஆக்கசக்தியில் சிறுபகுதியையே பயன்படுத்துகிறார்கள்.மாணவரின் புத்திசாலித்தனம், ஆக்கசக்தி,கற்கும்திறனை ஒழுங்குமுறையான திட்டங்களால் மேம்படுத்தலே எம் பிரதானநோக்கம்.

இயற்கைவிதிகளை ஒன்றிவாழ்பவர்கள் மகிழ்வு,சுயஉணர்வு,சகமனிதர்க்கு மதிப்பு,சூழலுக்கு கவனிப்பு, சுயநிர்வாகம் ஆகியதன்மை உள்ளவர்களாக விளங்குவர்.

மாணவர்கட்கு அதிகபோசணையான மதியஉணவு வழங்கப்படும்.

அரசு கல்விக்கு அதிகநிதி தரும்.

சமூகவன்முறைகட்கு காரணியான உடல்,உள அமைதியீனம்,யோகிகளால் நீக்கப்படும்.சிறைக்கைதிகள் விஞ்ஞானமுறையிலான திட்டங்களால் முன்னேற்றப்படுவர்.

சூழல் மாசடைதல் தவிர்க்கப்பட்டு மக்கள் சூழல்அக்கறை கூட்டப்படும்.இயற்கைவிதிகள் மதிக்கப்படும். சக்திபாவிப்பு,போக்குவரத்து,நகரவடிவமைப்பு இயற்கைவிதிகட்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்படும்.

பூச்சிநாசினி,களைநாசினி,உரம்அற்ற, வீரியமான,சூழல்நட்பான,இயற்கைவிதியுடன் கூடிய விவசாயமுறைகள் அறிமுகமாகும்.நீண்டநோக்கில்,இத்தகைய,விவசாயகல்வி சூழல்,ஆரோக்கிய,பொருளாதார நலம் தரும்.

சமூகநிதியில் தங்கிவாழ்வோர்க்கு, தத்தம்,திறனை பாவித்துமுன்னேற வழிகற்பிக்கப்படும்.முதியோர் அறிவு அனுபவம் நன்குபயன்படுத்தப்படும்.

ஐரோப்பா ஒன்றுசேர எம்கட்சி உதவும். திறந்த உலகசமுதாயம் எம் சமுதாயம் முன்னேற அறிவுதரும். பலமிலியன் மக்கள் ஒன்றாகவியங்க தகவல்தொடர்பு,ஒத்துழைப்பு பன்னாடுகட்கிடையே அவசியமானது.

மற்றமக்கள்பற்றிய எதிர்மறைக்கருத்துக்கள் யோகிகளால் நடுநிலையாக்கப்படும்.7000யோகிகள் நோர்வேயிலிருந்தியங்கி உலகில் அமைதி, ஆக்கசக்தி பெருக உழைப்பர்.

அகதிப்பிரச்சனை சுயஉதவிமுறை, தனிமனிதமுன்னேற்றத்தால் தீர்க்கப்படும்.அரசியல்தொழில் நேர்மை,நீதிகாக்கும் தொழிலாக மாற்றப்படும்.

**Naturlovpartiet,PB.32,**
**2610 Mesnali,Norway.**
**Tel.6236 3320 Fax.6236 3372**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

/ஐ.ஐ.ரி. 2351365/3094 :திருச்சி:பேராசிரியர்கே.செல்லப்பா -பாரதிதாசன் பல்கலைக்கழகம்:பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப் ஈபர் கல்லூரி மதுரை:இரா.இரவி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:இரா.ஜெயசேதுபதி:: கதிர்.சம்பத்குமார் கேரளா: பேராசிரியர் கே ஏ.ராஜாராம்; ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்.கைதராபாத்:

## ஆந்திர பெண் எழுத்தாளர் டாக்டர் நரசமம்பா பேட்டி!

என்.ஆர்.இலட்சுமணன்,ஆந்திரா

ஆந்திர பெண் எழுத்தாளரான டாக்டர் நரசமம்பா 1989 முதல் ஆங்கிலம்,தெலுங்கு,இந்திமொழிகளில் நாட்டுப்புறஇலக்கியம் பற்றி பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

பெண்கள் நாட்டுப்புற இலக்கியங்கள்,பள்ளிக்கல்வியில் நா.இல.பற்றியும் தொடர்ந்து எழுதிவருகிறார்கள்.

பள்ளியில் மாணவர்களுடன் கலந்துரையாடி புதுவழிமுறைகளைப் பாவித்து கல்விபோதித்துவருகிறார் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு புதியவெற்றி கண்டு மகிழ்கிறார்கள்.மனிதமனம்,இதயம் பற்றிப்புரிந்து கொண்டு இத்துறையில் ஈடுபட்டுள்ளார்.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் முஸ்லிம்பெண்கள் வாய்மொழிக் கதைகள் பற்றியும் இவர் ஆராய்ச்சி செய்துள்ளார்.பள்ளியில் கிராமியஇலக்கியம்–ஆராய்ச்சியில் புதிய துவக்கம் கண்டுள்ளார்கள்.

உலகஎழுத்தாளர்களைச் சந்தித்து எழுத்து,கருத்துபரிமாற்றம் செய்து முன்னேற்றம்காணவிரும்புகிறார்கள். மக்களுடன் நெருங்கிப்பழகி,அவர்தம் வாழ்க்கையை நோக்கி எழுத்தாளர்கள் எழுதி ஆதரவைப்பெறலாம் என்கிறார் இவர்!

சமீபத்தில் பின்லாந்தில், சர்வதேச கிராமப்புற இலக்கியவியல் பற்றி 2 வார,உயர்ஆராய்ச்சிப்பயிற்சி பெற்று வந்துள்ளார்.தெலுங்குப் பல்கலைக் கழகம் அவரது திறமைக்கு தங்க மெடல் அளித்துக் கௌரவித்தது. அவரது பேட்டி இதோ!

கேள்வி:தங்கள் எழுத்துப்பணிபற்றி!

பதில்:1989ல் இருந்து தெலுங்கு, ஆங்கிலத்தில் நாட்டுப்புறஇலக்கியங்கள் பற்றி பலதலைப்புகளில் எழுதியுள்ளேன்.அண்மையில் இந்து பத்திரிகையிலும்,முன்பு பல ஆய்வுச் சஞ்சிகையிலும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் வெளிவந்தன.

கேள்வி:எழுத்தில் தங்களுக்கு விருப்பமான துறைகள்?

பதில்:பெண்களின் நாட்டுப்புற இலக்கியங்களும்:பாடசாலைக்கல்வியில் நாட்டுப்புற இலக்கியங்களுமே என்னைக் கவர்ந்த துறைகளாம்.

கேள்வி:தங்கள் கற்பிப்புபணி பற்றி!

பதில்:கல்விமாணி பட்டப்படிப்பு தந்த முறைகளைப் பின்பற்றினும், நான் என் ஆய்வுமுடிவு,மாணவர் தேவையை ஒட்டி எனக்கென ஒரு தனியான பாணி: முறையை மேற்கொள்கிறேன்.பரீட்சை முறைகளில் நான் எதுவிதமாற்றமும் செய்ய முடியாது எனினும், எனது மாணவர்கள்மூலம் பலபரிசோதனைகளை வகுப்பறையில் செய்துவருகிறேன்.ஒவ்வொருவரிடமும் இருந்து நாம் அனைவரும் கற்பதுடன்: முன்னேற்றமும்,கண்டுவருவதும் அற்புதமானது!

கேள்வி:எப்படி தங்களுக்கு நாட்டுப்புற இலக்கியங்களில் ஆர்வம் வந்தது?

பதில்:முதலில் இது தற்செயலாக ஏற்பட்டஆர்வம்!பின்னர் இவற்றின் தன்மை எந்த மனித இதயம்,மனத்தையும் தொட்டுவிடும் அடிப்படைப்பாங்கு உள்ளது என அறிந்து ஆச்சரியம் கொண்டேன்.

கேள்வி:தங்கள்,கலாநிதி ஆய்வுபற்றி..!

பதில்:அது ஒரு புதிய தலைப்பு! இந்திய கிராமியஇலக்கிய ஆய்வில் இத்தலைப்பு–பாடசாலைகளில் கிராமியஇலக்கியம்–முதல்வகையாகும். இதுவொரு சாதனை எனக் கருதாது, சாதனையின் ஆரம்பம் என்றே கருதுகிறேன்.

பல அறிஞர்களின் கணிசமான, தொடர்ந்த ஆய்வுப் பங்களிப்பின் பின் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாய் அமையும்.

கேள்வி:உலக எழுத்தாளர்களைக் கூட்டி மாநாடுகள் நடத்துவது பற்றி..?

பதில்:அது பெரிய முயற்சி!எனினும் அவர்கள் காலத்துக்கு காலம் சந்தித்து,கலந்துரையாடி,பல்வேறு கருத்துக்களைப்பரிமாறி,ஒருவலைப்பின்னலை உருவாக்குதல்,நலமே!

கேள்வி:இளம் எழுத்தாளர்கட்கு தங்கள் ஆலோசனை என்ன?

பதில்:மற்ற எழுத்தாளர்கள் போல் நான் தொடர்ந்து எழுதுபவளல்ல! எனினும் எனக்கும்,மற்றய சக இளம் எழுத்தாளர்கட்கும் நான் கூறவிரும்புவது இதுதான்:– மக்களுடனும்,அவர்தம் வாழ்வுடனும் நாம் ஒன்றித்தால்:மிக நெருக்கமாக அவதானித்தால் எமது எழுத்து மேலும் உரமடையும்!

'சர்வதேசதமிழர்' பற்றி மேலுமறிய தானும்,தமிழ்நண்பி இந்திரா விசுவநாதனும் விரும்புவதாகக்கூறி பேட்டியை நிறைவுசெய்தார்.

## கதை சொல்வோம்! கற்பிப்போம்!!

டாக்டர்.கே.வி.எஸ்.எல்.நரசமம்பா

குழந்தைகள் பேசக் கற்க முன்பே கதை கேட்பதில் அதிகஆர்வம் காட்டுவர்.பெற்றார்,பாட்டன்,பாட்டியர் அயலவர் முதலில் ஆசிரியராவர்! ஆக கதைகள் கவனம்ஈர்க்க உதவும்.இதன் கல்வித்துறை நன்மைகள் இதுவரை புறக்கணிக்கப்பட்டுள்ளன.பஞ்சதந்திரக்கதைகள் முட்டாள்களைக்கூட திருத்துகின்றன. சமயநூல்களில் புரியாதகொள்கைகள் கதைகளால் கற்பிக்கப்படுகிறது. கற்போர் மையமாக இவ்வழியைப் பயன்படுத்தி நன்மை பெறலாம். இதில் பெரும்பங்கு கேட்போருக்கே விடவேண்டும்.

பொழுதுபோக்காக நமது பண்பாட்டு வளர்ச்சிக்கும் இது பயன்படும். வீட்டில் இது குழந்தைகட்கு நல்ல பொழுதுபோக்காக அமைவதுடன்,போதனாமுறையாயும் அமைகிறது.இந்தப்பழக்கம் பள்ளியில் செயல்முறைத்திட்டமாக அமையும். உலகை அறியவும்,வெளியிடும் திறமையை வளர்க்கவும் இதுதவும். பள்ளிக்கும் வீட்டுக்குமுள்ள வெளியை இது நிரப்பும்.வீட்டுப்பண்பையே பிள்ளை பாடசாலையிலும் எதிர்பார்க்கிறது.ஆக இதற்கு பள்ளியில் வகைசெய்து குழந்தைகளைக் கவரலாம். தானே கற்றுக்கொள்ள இது தாய்மொழிவழியைப்பின்பற்றுகிறது.வீட்டிலும்,பள்ளியிலும் இதையே விரும்பிக்கேட்டு மகிழ்கிறது. இது எதிர்காலத்தில் எழுதவும்,படிக்கவும் அடித்தளமாகின்றது.

கதைகள் மூலம் மொழிகள் கற்பதிலகு:மக்கள் வாழ்முறை,நீதி போதனை அறிதல்:கற்பனைத்திறன்,செயல்திறன்,ரசனைஉணர்வு,ஞாபகசக்தி, பகுத்தறிவு,உள்ளுணர்வை வளர்த்தல் கூடும்.தன்சூழலை அறியவும் பன்மொழி பழகவும்,பிறபண்பாடு அறியவும்,பிறர்தொடர்பு வலுக்கவும், இயற்கைஇயல்பான கதைகேட்பதும்,கதைசொல்வதும்,குழந்தைகட்கு நன்றாகஉதவுகிறது.இதனால் குழந்தைகள் இன்பமடைவதுடன், நன்மையும் பெறுகின்றனர்.உலகம் ஒரே குடும்பம்!எனும் அரிய தத்துவத்தையும் அவர் உணர்வர்!

நன்றி:இந்து–தமிழில்:சுருக்கம்

......................என்.ஆர்.இலட்சுமணன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்.ஆர்.லட்சுமணன்: ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்: இ.வளர்மதி சவுதிஅராபியா / அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்:
பி.யோகநாதன் :ஜித்தா:எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.றபீக் ஓமான்:எஸ்.கண்ணன்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்; ஜேர்மனி:க.செந்தில்:0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

**மாஸ்கோவில் எனது மறக்க முடியாத அனுபவங்கள்!**

**ஆரைம்பதி க.சபாரத்தினம்**

மாஸ்கோ நகரில் உள்ள அதி பெரிய மனநோயாளர் ஆஸ்பத்திரி கஸன்கோ வைத்தியசாலை ஆகும். தற்போது அலெக்சீவ் மனநோயாளர் வைத்தியசாலை என பெயர்மாற்றம் பெற்றுள்ளது. இந்த மனநோயாளர்ஆஸ்பத்திரியின் 33 ம் இலக்கவாட்டிலிருந்து ஒரு பெண் அதிகாரி அவசரமாக நமது தூதரகத்துடன் தொடர்புகொண்டார்.

இலங்கைப்பெண்மணி ஒருவர் செரமித்தியேவ் விமானநிலையத்தில் தத்தளித்துக்கொண்டிருந்ததாகவும், அவர் ஒருமனநோயாளி என விமானநிலைய அதிகாரிகள் கருதியதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்,இப்போது குணமடைந்து நல்லநிலையில் இருப்பதாகவும் கூறி, உடனடியாக அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறத்தவறின்,தாமதமாகும் ஒவ்வொரு மேலதிகநாளுக்கும் உரியகட்டணத்தை இலங்கைத்தூதரகமே செலுத்தவேண்டிவரும் எனவும்,முன்னறிவித்தல் விடுத்தார்.

தாமதத்தை சாட்டாகவைத்து,கொடுப்பனவுக்கான பில்லை அனுப்பிவைத்து விட்டால் குற்றம் தூதரகத்தைச் சார்ந்துவிடும்.

ரஸ்யாவின் அரசநிறுவனங்களிலும், ஏனைய அரசவங்கிகளிலும் கூட,அதிகாரிகள் தத்தமது விருப்பின் பேரில் நடைமுறைவிதிகளை மாற்றிவருவது இன்றைய நாளாந்தநிகழ்வு. அதிலும் சிறப்பாக வெளிநாட்டவர் சம்பந்தப்படும், விடயங்களில்,எவ்வளவுக்கு அதிக நடைமுறைவிதிகளைப்புகுத்தி,பணம் அறவிடமுடியுமோ,அவ்வளவு அறவிடுவதைக்காணமுடிகிறது.அப்படியான செயல்களில் இவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

உதாரணமாக ரஸ்யநாட்டின் வெளிநாட்டு வர்த்தகவங்கியை எடுத்துக் கொண்டால்,நாளாந்தம் புதியபுதிய நடைமுறைகளைப் வெளிநாட்டவர்க்குப்புகுத்தி, அவர்களது முதலீட்டுவைப்புகளிலிருந்து அர்த்தமற்ற பல செலவீனங்களை பற்றுவைத்து அறவிட்டுக்கொள்வதை பலர் வருத்தத்துடன் முறையிட்டுக்கொள்கிறார்கள்.

சாதாரணமாக வங்கி போன்ற உயர்வர்த்தக நிலையங்கள் தம் வாடிக்கையாளரின் உரிமைகளைக்கண்ணியமாகப் பாதுகாத்து அவர்கள் தேவையை நிறைவுசெய்வதில் அதிக அக்கறை செலுத்தும்.இதனால் தனக்கும், நாட்டுக்கும் நியாயமான வருமானத்தைப் பெறுவதுடன்,நற்பெயரையும் சம்பாதிக்க முடியும். ஆனால் ரஷ்யாவிலோ மறைமுகமாக சுரண்டல் நடைபெறுவதையும்,இதனால் வர்த்தகஅபிவிருத்தி குன்றுவதையும் அவதானிக்க இயலும்.அரசயந்திரம் இங்கு செயலூக்கம் அற்று இருப்பதால்,உத்தியோகத்தர்களான தனிநபர் மேலாட்சி அதிகரித்து வருவதைக்காணலாம்.

மொழிபெயர்ப்பாளர்கள் நால்வரும்,அன்று ஏதேதோ காரணங்களால் தூதரகத்தில் இல்லாத காரணத்தால், அங்கு மெசஞ்சராக பணிபுரியும்–கோஸ்தியா– எனப்படும்,திரு.சொறக்கின் மிக்கேல் கொன்ரன்ரினோவிச் என்ற ரஷ்யரை அழைத்துக்கொண்டு வைத்தியசாலைக்குப்புறப்பட்டுச்சென்றேன்.

இவர் மாஸ்கோ அரச சர்வகலாசாலையில் கீழைத்தேச மொழிகள் பிரிவில் பயின்று பட்டம் பெற்றவர்.சிங்களமொழியைச் சிறப்புப் பாடமாகப்பயின்றவர். இதனால் சிங்களமொழியில் வியக்கத்தக்க அறிவும்,மொழி ஆளுமையும், உடையவர்.அத்தோடு ஆங்கிலஅறிவும் உள்ளவர்.இவர்பற்றிய சிறுகட்டுரை ஒன்றை 02.07.94ல் வெளிவந்த இலங்கையின் ஆங்கிலப்பத்திரிகையான–தஐலண்ட்–இலும் எழுதியுள்ளேன்.

நாங்கள் வைத்தியசாலையை அடைந்ததும்,அங்குள்ள டாக்டர் அம்மா, எம்மை அழைத்துச்சென்று,அவரது காரியாலயஅறையில் அமர்த்திவிட்டு,வார்ட்டில் தங்கி சிகிச்சைபெற்றுவந்த அந்தப்பெண்ணை அழைத்துவந்து எம்முன் நிறுத்தினார்.

பார்வைக்கு ஒருசிறுமி போல், காணப்பட்ட அந்தப்பெண்ணுக்கு வயது இருபத்தொன்பது!

இலங்கையின் மலையகத்தின் மாத்தளை நகரினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 2 வருடங்கட்கு முன் வீட்டுப்பணிப்பெண்ணாக மத்திய கிழக்கு நாடொன்றுக்கு தொழில் நிமித்தம் சென்றிருந்தவர். அங்கு வீட்டு எசமானர்களின் கெடுபிடிகள், கொடுமைகளால் அவ்வீட்டை விட்டு நீங்கி,இரக்கம் கொண்ட ஒருவரின் சிபார்சினால் வேறொருவீட்டில் பணியாளராகச் சேர்ந்துகொண்டார்.ஏழ்மையில் பிறந்தவர்களுக்கு உலகம் வழங்கும் தண்டனை பலவிதம்!அவற்றில் இந்த எசமானர் கொடுமை ஒருவிதம்!!

சேவை ஒப்பந்தப்படி, காலமுடிவில் நாடு திரும்ப இலவசபயணச்சீட்டு வழங்கப்படவேண்டியதும், ஒப்புதல் செய்யப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று! அதன்படி இந்த மலையகப்பெண் அழகேஸ்வரி தன் உரிமை பற்றி வெளிப்படுத்தியதும்,சீற்றமுற்ற எசமானி அவளை நையப்புடைத்து,பின்பு விமானத்தில் ஏற்றி உடனேஅனுப்பியும் விட்டாராம்.

ஏழைகள் வயலை வளப்படுத்தும், மண்புழுக்கள் போன்றவர்கள். சமுதாயத்திற்கு வேண்டப்படாதவர்களாக கருதப்படினும்,சமுதாயத்தின் வளத்துக்கு வேண்டிய உழைப்பை வெளிப்பாடின்றி ஊட்டிக்கொண்டிருப்பவர்கள் அவர்கள்தான்!

விமானத்திலேறிய நேரத்தில் இருந்து அழகேஸ்வரிக்கு ஒருவித மயக்கம் ஏற்பட்டதாம்.

அபுதாபியில் இருந்து மாஸ்கோ வந்த அவ்விமானம்,இப்பெண்ணின் நிலையை உணர்ந்து அவளை செரமித்தியேவ்–2 விமானநிலையப்பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்துச்சென்றுவிட்டது மனநோய் காரணமாக இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

இதுவே நடந்த சம்பவம்!

மலையகத்தைப் பிறப்பிடமாகக்கொண்டிருந்ததால், செல்வி அழகேஸ்வரியினால் சரளமாக சிங்களமொழியில் உரையாடமுடிந்தது.

சிங்களமொழி விற்பன்னரான கோஸ்தியா மூலம் வைத்தியசாலை அதிகாரிகளுடன் பேசி ஏற்பாடுசெய்து, அழகேஸ்வரியை விமானநிலையத்துக்கு அழைத்துச் சென்று இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

மத்தியகிழக்கு நாடுகளில் வீட்டுப்பணிப்பெண்களாக வேலைக்கமர்த்தப்படும், ஆசியநாட்டுப் பெண்களில் பெரும்பாலானவர்கள்,எசமானர்களின் இரக்கமற்ற கொடூரங்களுக்கும்,மிருகத்தனங்களுக்கும் இரையாகிவருகின்றனர்,என சில செய்தித்தாள்கள் கூறுகின்றன.

அத்தோடு தமது நியாயமான உரிமைகளுக்காக அடம்பிடிப்போர் அநீதியாகத் தண்டிக்கப்படுவதாகவும் செய்தி! எலிக்கு மரணம்! பூனைக்கு விளையாட்டு!

**மரியசீலனுக்கு கத்திக்குத்து!**

தற்போதைய சூழ்நிலையில் மாஸ்கோவில் கொலை,கொள்ளை,களவு,சூதாட்டம்,விபச்சாரம் என குற்றச்செயல்கள் அதிகரித்துவருகின்றன.மாபியா எனும் சர்வதேச கேடிகள் கும்பல்கள் தம் கைவரிசையைக்காட்டி வருகின்றன. இந்தநிலை இடம்பெற்று வருவதற்கு வறுமை மட்டும் முழுக்காரணியல்ல! நாட்டின் நிருவாகத்தின் கையாலாகாத்தனம் அல்லது திறமையின்மையே காரணமாகும்.

அண்மையில் ட்ராம் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது ஆங்கிலம் பேசத்தெரிந்த ஒரு ருஷ்ய பெண்விஞ்ஞானியை சந்திக்க நேர்ந்தது.அவருடன் உரையாடியதில் சில யதார்த்தக்கருத்துக்களையும் அறிய முடிந்தது.அந்த அம்மணியின் கூற்றுப்படி,ரஷ்யாவின் இன்றைய பிற்போக்கு நிலைக்கு தலைமைத்துவத்திலுள்ள சீர்கேடுகளே காரணம் என்றார்.

(வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்: பிரான்ஸ்: செ.ஜெயகுமார்:த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன்
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதூரன்: க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி:மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;கௌரி ராஜசுந்தரம் யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஹம்சானந்தி: செ.நடராசா

## தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்!

கோலாலம்பூர் விமானநிலையத்தில்
விமானம் சுமார் ஒருமணிநேரம்
தங்கியபோது,அங்குள்ள–தீர்வையற்
ற அங்காடி–யை சுற்றிப்பார்வையி
ட்ட போது பல தமிழர்களை
கண்டு உரையாடும் சந்தர்ப்பம்
கிட்டியது.அனேகமாக தமிழ்யுவதி
கள் மலேசியரின் எல்லாக் கடைக
ளிலும் பணிபுரிவது அங்குள்ள
ஒரு பாகுபாடற்ற சமூகத் தன்மை
யைக் காட்டுவது போலும்,அனை
த்து சமூகத்தையும் அணைத்துச்
செல்லும் பெருந்தன்மையை விளக்
குவதாயும்,ஒரு வியாபாரத்தந்திரமா
யும் காணப்பட்டது.அதாவது
வாடிக்கையாளர்கள் பலரகமான
இனத்தவராக இருப்பதால் கடை
களில் பணிபுரிவோரும் பலஇனத்த
வர் எனில்,அது ஒரு மலேசியா
குறித்த நேர்மறையான அபிப்பிராய
த்தை ஏற்படுத்தும் என்பதும்
மறுக்க முடியாத ஒன்றாகும்!
இந்த முன்மாதிரியை,இலங்கை
போன்ற பல்லினமக்கள் வாழ் நாடு
களும்,ஏன் பல ஐரோப்பியநாடுகளும்
கூடப் பின்பற்றவேண்டும்.பெரும்
பான்மை மக்கள் பெருந்தன்மை
யுடன் நடந்து கொள்ளாவிடின்,
அங்கு அமைதி,மகிழ்ச்சி வருவது
கடினம்!

திருப்தியீனம்,முரண்பாடுகள்
வளர்வதற்கு கல்வி,தொழில்வாய்ப்பு,
வீடமைப்பு,காணிப்பங்கீடு,மனித–
அரசியல் உரிமைகள்,மொழிஉரிமை
பலஇனங்களிடையே சமமாக மதிக்
கப்படாமை தான் காரணம்.ஆனால்
மலேசியா,சிங்கப்பூரில் எந்தத்தமிழரா
வது தமக்கு பாகுபாடு காட்டப்படு
கிறது எனக்கூறவில்லை.சகலஇன
ங்களும் இங்கு சமமாகவே மதிக்க
ப்படுகிறார்கள்!என ஒரே குரலில்
கூறினர்.எனினும் தமிழர் பலர் இன்
னமும் தொழிலாளர் வர்க்கமாகவே
இங்கு விளங்குவதை நேரில் பார்க்
கக்கூடியதாக இருந்தது.மலேசியா
வில் பல இளையதமிழர் கல்வி,வர்
த்தகம்,தொழில்துறையில் முன்னே
ற்றம் கண்டிருப்பினும் பழைய
தலைமுறை தோட்டத்தொழில்
துறையின் அச்சாணியாக இன்ன
மும் விளங்குகிறது.
சுத்திகரிப்பு,பூங்கா பராமரிப்பு,வீதிய
மைப்பு,ரயில்வே பணி,தோட்டத்தொ
ழில்,விவசாயம் தொடர்ந்தும்
தமிழர் கையில் சிங்கப்பூர்,மலேசியா
வில் மட்டுமன்றி உலகில் வேறு
பகுதிகளிலும் திகழலாம் எனும்
கருத்து சிந்திக்கப்படவேண்டியது!
தமிழர் எந்தத்தொழிலிலும் விருப்பு,
வெறுப்பின்றி தப்பிவாழல் கருதி
கடுமையாக உழைக்கும் பண்பு
டையவர்கள்!தொழில்தேடி உலகின்
எந்தமூலைக்கும் போகும் தன்மை
யும்,எந்தத்தொழிலையும் ஏற்கும்
தன்மையும்,எந்த மனிதருடன் சமா
ளிக்கும் திறனும் நிரம்பப்பெற்றதால்
தான்,இன்று தமிழர் உலகமெங்கும்
பரந்து சிறப்புடன் வாழ்கின்றனர்.
எனினும் தம்மொழி மறப்பின்,தம்
அடையாளம் இழப்பர்!அது தவிர்
க்கமுடியாததாகவே இருக்கும்.
மலேசியாவில் பல தமிழ்ப் பாடசா
லைகள் இருப்பினும்,பலபிள்ளைகள்
தமிழை ஒரு பாடமாகப்படிப்பினும்
பலர் தமிழில் பேசினும்,வாசிப்பதும்
எழுதுவதும் இளைய தமிழர்
பலருக்கு இயலாததாகவே உள்ள
து, கவலை தருவது!ஐரோப்பாவி
லும் இதேநிலைமை வரும்.இன்னு
ம் ஒருபடி மேலே போய் தமிழே
பேசமுடியாத நிலையும் நிச்சயம்!
எனினும் பெற்றோர் பங்கு இங்கு
தமிழின் எதிர்காலத்தை நிர்ணயம்
செய்யும்.
சிங்கப்பூர் சாங்கி விமானநிலைய
த்தில் நாம் கால்பதித்ததும், குடிவ
ரவு அதிகாரிகள் 14நாள் விசாவை
கடவுச்சீட்டில் பொறித்தனர்.
உலகிலேயே சிங்கப்பூரின் பொருளா
தார வெற்றிக்கு இந்த 14 நாள்
(அனேக நாடுகட்கு) திறந்த விசா
முறையும் ஒருகாரணமாகும்.
இதனால் 622 ச.கிமீ.பரப்பளவும்,
சுமார் 2.7மிலியன் சனத்தொகையும்
கொண்ட சிறியநாடான சிங்கப்பூர்
சுமார் 6மிலியன் உல்லாசப்பிரயாணி
களின் வருடாந்த வருகையால்
அந்நியசெலாவணி நிரம்பியநிலையி
ல் உள்ளது.நாடு பெரிதாயுள்ள
இந்தியா,ரஸ்யா,சீனா,அமெரிக்காவுட
ன் மற்றும் வறுமையான பலநாடுக
ளும்கூட இந்த விசா அற்ற நடை
முறையை அமுல்படுத்தின் கணிச
மான பொருளாதார முன்னேற்றம்
காணலாம்,என்பதில் சந்தேகமில்லை
சில சட்டவிரோத குடியேறுவோர்
புகுவர் எனினும்,அதற்கும் சிங்கப்
பூர் மிக வினைத்திறனான முறை
களை பாவிக்கிறது.அதாவது இங்
கு வந்தடையும் பயணிக்கு நிரப்பு
படிவம் வழங்கப்பட்டு,இரு பகுதிக
ளும் ஒத்தசுயதரவால் நிரப்பப்படும்.
ஒரு பகுதி பயணியின் கடவுச்சீட்
டிலும்,மறுபகுதி குடிவரவுஅதிகாரி
களிடமும் இருக்கும்.பயணி வெளி
யேறும்போது ஒருபகுதி மீளஅளிக்
கப்படவேண்டும்.குறித்த நாளில்
வெளியேறத்தவறும் பயணி இமிகி
றேசன் பொலிசாரிடம் தப்புவது
கடினம்!இது சிறியநாடாக இருப்ப
தால் ஒளிக்க முயல்வதும் வெற்றி
தராது!எனினும் மலேசிய,இந்திய,மற்
றும் அயல்நாட்டவர் சிலர் சிங்கப்
பூரில் ஒளித்துவாழ்ந்து சட்டவிரோ
தமாக தொழில்புரிவதாகக் கேள்வி!
பல இந்திய,வங்காளதேச தொழிலா
ளர்,இலங்கை,பிலிப்பினோ வீட்டுதவி
ப்பெண்கள் ஒப்பந்தஅடிப்படையில்
மிகக்குறைந்த மாதச் சம்பளத்தில்
(600 சி.டாலர்)இங்கு பணிபுரிகிறார்
கள்.அவர்களிடமிருந்து சிங்கப்பூர்
அரசு அதிகவரியும் அறவிடுவது
கொடுமையிலும் கொடுமை! என
ஒரு டாக்சிஓட்டுனர் கவலையுடன்
குறிப்பிட்டார்.பிலிப்பீன் பணிப்பெண்
ஒருவர் சிங்கப்பூரில் கொலைக்
குற்றத்தில் மரணதண்டனை
பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட
மனஸ்தாபத்தில்,தற்போது இலங்
கையிலிருந்தே அதிக பணிப்பெண்
கள் எடுக்கப்படுவதாயும்,ஆனால்
அவர்கள் ஆங்கிலம் அதிகம்பேச
முடியாமல் இருப்பதாயும் அந்த
மலே சாரதி குறிப்பிட்டார்.தமிழர்கள்
பற்றிய தன்கருத்தை ஒளிவு மறை
வின்றி கூறிய அவர்,சீனர்கள் வாழ்
வு காசே தான் கடவுளடா!என்றாகி
விட்டது!அவர்கள் மனிதர்களை
விட காசுக்கே அதிக மதிப்பு
தருபவர்கள்!! என வெறுப்புடன்
குறிப்பிட்டு,காசு உழைப்பதிலும்
அவர்கள் யூதர்கள் போல் படுசுட்டி
கள்!என்றார்.முன்பு அதிக டாக்சிக
ளை மலேக்காரர்களே ஓட்டியதா
யும்,பின்பு வந்த–கொம்பட்–எனும்
கம்பனி படிப்படியாக சீனர்களை
அதிகளவு புகுத்திவிட்டதாயும்
குற்றம் சாட்டினார்.தமிழர் அடிப்ப
டையில் ஒருதொழிலாளஇனம்,என்
றும்,மற்றவர் உத்தரவை சிரமேற்
கொண்டு செயல்படும் தன்மையை
அதிகளவு தமிழரிடம் காணக்கூடி
யதாக உள்ளது!எனவும் குறிப்பிட்
டார்.எனினும் தமிழர் தொடர்ந்தும்
இப்படி வாழாது தாமும் பல தொ
ழில்களை:வர்த்தகங்களை தொடங்
கி முன்னேறவேண்டும்!என்றார்.

(வளரும்)................என்.எஸ்.பிரபு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு:கோபி.ரவி;மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் மயில்வேந்த ன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை:குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்:அமெரிக்கா: செ.பாஸ்கரன்; ஜே.ஜோர்ஜ் அவுஸ்திரேலியா:லெ.முருகபூபதி; பத்மா ஞானப்பிரகாசம்

# பனிப்பூக்கள். 8 காரையூரான்

யன்னலின் திரைச்சீலை விலகியது. வெளியே காற்று இல்லை அரத்த காற்றின் அரவ்சுவையாய் அங்காங்கு இன்னும் பனித்துகள்கள் வீட்டுச் சுவரில் ஒட்டியிருந்தது.. நிலவு ஒளியைப்பரப்பிய அந்தி வேளையில் எங்கோ ஒருவாகனம் அராஜக ஒலிஎழுப்பிச் சென்றது. அதன்பின் எங்கும் நிசப்தம். புயலுக்குப்பின் தோன்றிய அமைதி. இப்போது வானத்தையும் நிலவையும் பார்த்தால் இனிமேல் வானத்தில் எப்போதும் மாற்றமே ஏற்படாது என்பது போல ஒருவித தோற்றம் . ஆனால் இந்தக் கோலம் நிலையில்லாது. எப்போதும் இந்த அமைதியை பனியும் காற்றும் சிதறடிக்கலாம். வெளியில் மட்டுமா இந்த ஆபத்தான அமைதி நிலவுகின்றது? வீட்டிற்குள்ளும் அதே நிலைதான் என்கின்றபோது தன்னைக் கட்டுப்படுத்தமுடியாது விரக்தியாய்ச் சிரித்தாள்.

பின்பு மெதுவாக தனது படுக்கைக்குள் புகுந்து கொண்டு போர்வையை இழுத்து தலைமுட்டப் போர்த்துக் கொண்டாலும் நித்திரைமாத்திரம் வித்தைகாட்டிக் கொண்டிருந்தது. கட்டியணைக்க கணவன் இருந்தால் என்ன எனத் தோன்றியது.. காதல் என உச்சரித்தாலே சாமி ஏறிவிடுகின்றது எம்மவரில். இளமையை, அதன் தவிப்பை ஏன் இவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை? நித்திரை போய்விட்டது. பின்பு அவள் விளக்கை அணைத்து , தலையணையை வரித்து , நித்திரையை வலுவில் மணம்முடித்து , மயங்கும் போது , அந்தவீட்டில் எந்த உயிர்க்கும் இவ்வுலக உணர்ச்சி இருந்திருக்கவில்லை.

புத்தகப் பைக்குள் புத்தகத்திற்குப் பதிலாக தனக்கு அத்தியாவசியம் வேண்டிய அத்தனை துணிமணிகளையும் சிறை செய்திருந்தாள் அனு. அவளுக்கு யாரும் அறியாது வெளியே சென்று விடவேண்டுமென மனதிற்குள் குறுகுறுப்பும் படபடப்புமாய் இருந்தது. யாரும் தன்மீது அச்சப் படுவதை அவள் அடியோடு வெறுத்ததால் மிகவும் அவதானமாய் நடந்து கொண்டாள்.

ஏதோ சாப்பாடு. என்னவென்று தெரியவில்லை. அதை அறிந்து கொள்ளும் ஆர்வமும் அவளிற்கில்லை. மனதில் ஆயிரமாயிரம் அங்கலாயிப்பு ஓலமிட அவற்றை அள்ளித் திணித்துக் கொண்டாள். அது என்ன பாலா , நீரா என்பதுகூடப் புரியாதநிலையில் பருகினாள். யாரும் எதுவும் போசவும் இல்லை, சந்தேகப் படவும் இல்லை. வெளியே வந்தவள் வாயிலில் இருந்த காலணியையும், மேலங்கியையும் மாட்டிக் கொண்டு,வெளிக்கதவைத் தாண்டித் தெருவில் இறங்கிவிட்டாள்.

இப்போது அனுவுக்கு துள்ளிக் கொண்டே ஓடவேண்டும்போல் இருந்தது. நிஜமாகவே சிறிது துள்ளித் துள்ளி வேகநடை நடந்தாள். அடைத்துக்கிடந்த பறவை அனுபவித்த சுதந்திரமாய் அவளுள்ளம் துள்ளிக் குதித்தது. ஆனாலும் மனதிற்குள் ஒரு விறுவிறுப்பு இடைவிடாது இருந்தது. உள்ளத்தில் இது நிரந்தரமற்றது என்பதுபோல ஒரு அச்சமும் அவளை ஆட்டிப் படைத்தது . இதை நிரந்தரமாக்க வேண்டும் என்பதில் முழுவெறியும் இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்த மனம் உத்தரவிட்டாலும் , கால்கள் அதை ஒத்துக் கொள்ளாது முரண்டு பிடித்தது. சிரமப்பட்டு முயற்சித்து , முன்னேறிக் கொண்டிருந்தாள்.

வெண்விரிப்பில் வர்ண பவளங்கள் பதித்ததுபோல் வண்ண உடையணிந்த மனிதர்களும், வண்ணவண்ண நிறங்களில் வாகனங்களும், வீதியை அலங்கரித்தாலும் , அவசரத்தில் இருந்த அனுவால் இவற்றை இரசிக்க முடியவில்லை. பதிலாக அவள் விழிகள் அந்த நீலக்கட்டடத்தில் நிலைகுத்தி இருந்தது. கால்களும் இப்போது கதிபெற்று அந்த இடத்தை நோக்கி நடந்தது , என்பதைவிட ஓடியது எனலாம். அவள் கண்கள் இப்போது ஸ்தீக் என்னும் ஓடத்தை தேடி உருண்டுகொண்டிருந்தது. அவள் மனதில் இன்னும் சந்தோசம் அதிகமாக துள்ளித் துள்ளி ஓடத் தொடங்கினாள்.

ஸ்தீக் புத்தகப் பையொன்றுடன் கைகளை அசைத்தவண்ணம் நின்றான். சந்தோசத்திற்கு இன்று தரான சுதந்திரமாய் இருக்க வேண்டும். இருவர் முகத்திலும் பொங்கி வழிந்தவண்ணம் இருந்தது. ஏன் இந்த சந்தோசம் என்பது புரியாவிட்டாலும் ஒன்று மாத்திரம் புரியத் தொடங்கியது. அவர்கள் முகத்தில் வெறும் சந்தோசம் மாத்திரம் குடிகொண்டிருக்கவில்லை. ஒருவித அவதி சுறுசுறுப்பு ஆகியவையும் அப்பிக் கொண்டிருந்தன .

அனு அந்த வீட்டை அடையவும் , சொல்லி வைத்தாற் போன்று சாம்பல்நிற "வொல்வோ" வாடகைக் வண்டி வந்து நின்றது. அனு பின்னுக்கும் , ஸ்தீக் முன்னுக்கும் , அடைக்கலம் புக வடிகட்டிய புகையைத் தள்ளியவண்ணம் நகர்ந்தது.

மீற்றர் குறோணர் பத்தொன்பதைக் காட்டிக் கொண்டிருக்க எங்கே என்ற சாரதியின் கேள்விக்கு "விமான நிலையத்திற்குப்போ " எனப் பதிலளித்தான் ஸ்தீக்.

சாரதி ஒருமுறை இருவர் மீதும் சந்தேகப் பார்வையொன்றை வீசிவிட்டு , எதுவாய் இருந்தால் எனக்கென்ன என எண்ணியவனாய் வண்டியை ஓட்டிச் சென்றான். வண்டி மெதுவாகப் போவது போல் தோன்றினாலும் விரைவு படுத்த முயாதஅளவிற்கு வீதியெங்கும் பனி கொட்டி இருந்தது. அனுவின் மனதுமாத்திரம் இவன் வேகமாய் போகவில்லை யெனவும் , தெருவில் வாகனங்கள் கூடிவிட்டதெனவும் அங்கலாயித்துக் கொண்டது .

அனுவின் அங்கலாயிப்பை உடைத்தெறிவது போல கடல்கீழ் சுரங்கத்தினுடே கதிகூட்டி வாகனம் விரைந்து ஆகாய விமான நிலையத்தை அடைந்தது. ஸ்தீக் அவசர அவசரமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு , அங்கே கொட்டில் போன்று இருந்த விமான நிலையத்திற்குள் அனுவுடன் கரைந்து விட்டன்.

பெரிய கழுகுபோன்ற சிறியவிமானமொன்று பறப்பதற்குத் தயாராக நிற்க , ஸ்தீக்பயணச் சீட்டுக்களை நீட்டினான். சீட்டைப் பார்த்த விமானநிலைய அதிகாரி ஸ்திக்கை அனுமதித்துவிட்டு ,அனுவைக் காத்திருக்குமாறு கூற , அனு அவஸ்தையுடன் காத்திருந்தாள். அனுவுள் எதற்காக விமானநிலைய அதிகாரி இப்படிச் செய்தான் என்கின்ற கேள்வி மின்னிக் கொண்டிருக்கும் போதே விமானம் புறப்படத் தயாரானது. இதைப்பார்த்த அனு பொறுமை இழந்து தவிக்கும் போதுதான் அந்த அதிர்ச்சி ஏற்பட்டது.

அன்னம் இவளுக்கு மிக அருகில் வந்து , இவளைப் பிடித்து வைத்துக் கொண்டு "உன்ன நான் விடமாட்டன் . வீட்டுக்கு வா போகலாம்" என இழுத்துச் செல்லத் தொடங்கினாள்.

இல்ல நான் ஸ்தீக்கோட போறன்.

வாய மூடிக்கொண்டு என்னோட வாடி.

விமானம் புறப்பட்டது. விமானநிலைய அதிகாரிகள் இவர்களை வேடிக்கை பார்த்தனர்.

என்ன விடு என்னவிடு . அனு கத்தினாள்.

அனு திமிறும்போது விழிப்புக்கு வர ஏற்கனவே விழித்துக்கொண்ட சியாமிழி விளக்கை போட்டுவிட்டு அனுவின் முகத்தைப் பாரிதாபத்தோடு நோக்கினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறஸ்வானா:திருமதி.கமலா.வேலுப்பிள்ளை புருணை: எம்.ஐ.எம்.நகீப் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா கு.இரஞ்சகுணாளன் மலேசியா:க.மாணிக்கவாசகர் இந்தோனேசியா: மெடான்:எம்.நாகலிங்கம்;மு.சந்திரசேகரன்;பி.கிருஷ்ணா ஜகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன்;லட்சுமணன் பர்மா:அப்துல் ரசாக்

அனுவிற்கு சிறிது நேரத்தின் பின்புதான் தான் வாழ்ந்தது கனவுலகில் என்பது புரிய , சலிப்பு உண்டானது. சீ என்ன கனவிது? தனக்குள் சலித்துக் கொண்டாள்.
ஏண்டி கத்தினா?
ஒண்டுமில்ல , சும்மா கனவு.
சரி . கண்டதையும் நினைச்சு அலட்டிக்காம கடவுள மனசில நினைச்சுக் கொண்டு படு . பாட்டிமாதிரிப் பேசினாள் சியாமிழி. அவள் கதைப்பதில் மாத்திரம் பாட்டியல்ல. சிந்தனையிலும் பாட்டியாகவே இருந்ததோடு அகிம்சையிலும் அளவற்ற பற்றுதல் கொண்டிருந்தாள். பின்விளைவுகள் பற்றிச் சிந்திப்பதில் சியாமிழிக்கு நிகர் சியாமிழியே என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

விளக்கு அணைக்கப்பட அமைதி மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.
காலைப்பொழுது புலர்ந்திருந்தும் அனுவை கவலை பிடித்து வைத்துக் கொண்டுதான் இருந்தது. அவள் மனதில் ஸ்தீக் அடம்பிடித்துக் கொண்டிருக்க , பாடசாலைக்கு போவதற்குத் தயாரானாள். பைக்குள் புடவைஏதும் இருக்கவில்லை. சாட்சாத் புத்தகங்களே பொதிந்திருந்தன. அன்னம் ரொட்டித் துண்டுகளுக்கு பால்கட்டி வைத்துப் பொதி செய்து மேசையில் வைக்கும் போதும் அனுவின் சிந்தனை முழுவதும் ஸ்தீக்கையே சுற்றிச் சுற்றி வந்தது.
ஏதோ வாயில் போட்டு விழுங்கினாள். தன்னை மறந்த நிலையில் சாப்பாட்டுப் பொதியை மறந்துவிட்டுப் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றாள். அவள் நினைவுகள் எல்லாம் ஸ்தீக்கிடத்தில் மண்டியிட்டுக் கிடந்தன.
நடந்து வரும்போது ஸ்தீக்கின் வீட்டுவாசலை மிகவும் கவனித்து அவன் போய் விட்டான் என்பதை பனிமீது பதிந்திருந்த கால்த்தடத்தை வைத்து ஊகித்துக் கொண்டாள். இந்தவிடயத்தை மூளை ஊகித்ததும் கால்களின் கதியைக் கூட்ட , வேகநடையில் பாடசாலையை நோக்கிச் சென்றாள். வகுப்பறையில் இவளுக்காய்க் காத்துக் கொண்டிருந்த ஸ்தீக் இவளின் முகவாட்டத்தால் ஏற்பட்ட ஒருவித அவஸ்த்தையோடு மெதுவாக,
சுகமில்லையா?
அப்பிடி எல்லாம் இல்ல?
அப்ப ஏன் இப்பிடி இருக்கா?
மனக்குழப்பமா இருக்கு . நின்மதி இல்ல.
என்ன? என்ன நடந்திச்சு?
எல்லாம் தெரிஞ்சுபோச்சு. றேம்பக் கத்திச்சினம். புத்திமதி சொல்லிச்சினம். உன்ன மறக்கட்டாம். உன்ரவிட்டமாதிரி அவையால இதை ஏத்துக்க முடியல்ல. எனக்கு பைத்தியம் பிடிச்சிடும் போல இருக்கு.
என்ன மறந்திடுவியா? பரிதப்மாய்க் கேட்டான்.
விளையாடத ஸ்தீக் .என்ர உடம்பில உயிர்உள்ளவரைக்கும் என்னால உன்ன மறக்கமுடியாது.
எங்கையாவது கண்காணத இடத்துக்கு போயிடுவமா?
அதெப்பிடி? எங்கபோறது ? எப்பிடி வாழ்றது? பதினெட்டுவரையும் பொறுத்திருந்தாக வேண்டியதுதான். அதுக்குப்பிறகு எண்டா ஒஸ்லோபக்கம் ஸ்கூல் எடுத்துக் கொண்டு போயிடலாம் யாரும் எதுவும் செய்யேலாது.
வகுப்பிற்குள் ஆசிரியர் புகுந்து கொண்டார். தங்கள் சோகங்களை தங்களுக்குள் புதைத்தவண்ணம் பாடங்களை படிக்க முயன்று தோத்துக் கொண்டிருந்தனர் இருவரும்.
மேசைமீது சாப்பாட்டுப் பொதி இருப்பதைக் கண்ட அன்னம் அனு சாப்பாட்டை மறந்துவிட்டாள் என்பதையும், அவளுக்கு எந்தக் கடைக்குச் சென்றும் சாப்பிட மனம் வராது என்பதையும் அறிந்து, அவஸ்த்தை யுற்றவளாய் அனு பட்டினிகிடவாது சியாமிழிமூலம் சாப்பாட்டை அனுப்பி வைக்க எண்ணினாள்.
எண்ணியதை செயற்படுத்த அன்னத்தால் ஏவப்பட்ட சியாமிழி வீதியில் சென்றுகொண்டிருக்க வண்டியில் வந்த இளைஞர்கள் வண்டிக் கண்ணாடியைப் பதித்துவிட்டு விசில் அடித்துக் கொண்டு சென்றார்கள். சியாமிழிக்கு அவர்களை நிமிர்ந்து பார்க்கப் பிடிக்க வில்லை . இவர்களை நான் ஏன் நிமிர்ந்து பார்க்கவேண்டும்? அவர்கள் ஏன் என்னைக் கண்டு விசிலடிக்கவேண்டும்?..... சீ இதென்ன கேள்வி? இயற்கையின் அற்புதம் அல்லவா இது. இதையார் வெல்ல முடியும். இலகுவில் உணர்ச்சிவசப்படும் இவர்களால் முடியாதுதான். ஆனால் நாம் அப்படியல்லவே? எமது வாழ்க்கை அதன் தத்தவம் யாவும் வித்தியாசமானவை யல்லவோ? அதைவிட நான் ஒப்பந்தம் செய்யப்பட்ட மலரல்லவா? குனிந்ததலை நிமிராது செல்லல்தான் இன்றைய நிலைமைக்கு உசிதமானது. ஒப்பந்தம் செய்த தன் சொந்த வண்டை ஒருமுறை எண்ணியபோது ஏக்கம் அவள்மனதில் படரத் தொடங்கியது.
பாடசாலையில் பதினொருமணி இடைவேளை விடப்பட்டபோது ஸ்தீக்கும் , அனுவும் , நெருங்கி இருந்து நெஞ்சங்களைக் திறந்து காட்டிக் கொண்டிருந்தனர். சியாமிழி பாடசாலைக்குள் பிவேசித்து , தயக்கமாய் அனுவின் வகுப்பறைக்குள் நுளைந்தவளுக்கு இவர்கள் இருந்த விதம் என்னவோபோல் தோன்ற, சிறிது நேரம் எதுவும் செய்ய இயலாது ஸ்தம்பித்தாள். கோபம் பொத்துக் கொண்டு வந்தது. சீ இவள் என் தங்கையா? சொல்லச் சொல்ல இவனோடு கூத்தடிக்கிறாளே? எப்படி இவள் திருந்தப் போகிறாள்? எண்ண எண்ண எரிச்சல் முட்டிக் கொண்டு வந்தது. அந்த எரிச்சலோடே பின்னால் நின்ற சியாமிழி சற்றுப் பலத்தகுரலில்,
அனு? குரல் கொடுத்தாள். அனு திகிலுடன் திரும்பி,
அக்கா..........நீ.........நீ...............எங்க .............இங்க. நாக் குளறியது.
இந்தா சாப்பாடு.
சியாமிழியின் கண்கள் சிவப்பாய் மின்னின. அனுவுக்கு முதலில் திகிலாய் இருந்தாலும், பின்பு சியாமிழியின் கோபம் அதிக பாதிப்பை ஏற்படுத்த வில்லை என்றே கூறவேண்டும்.
இது நல்லதுக்கில்லடி அனு. நாங்கள் எவ்வளவு சொல்லியாச்சு. அதுக்குப்பிறகும் நீ இப்பிடிக் கூத்தடிக்கிறது நல்லாயில்ல. என்ன நடக்கப் போகுதெண்டு தெரியாது . ஆனா ஏதோ பெரிசா நடக்க போகுதெண்டு புரியுது. இதுக்கெல்லாம் சேர்த்து வாழ்க்கைபூ ராக் கவலப்படப் போற.
கத்திவிட்டு பரி வேகத்தில் பாடசாலையைக் கடந்து சென்றாள்.
என்ன சொன்னா அக்கா?

அனு பதிலளிக்குமுன்பே பாடசாலை மணிபதிலளிக்க பாடங்களுக்குள் மூழ்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. சியாமிழிக்கு ஆத்திரம் ஆத்திரமாய்வர அடக்கிக் கொண்டுபோய் அன்னத்திடம் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள். பிறகென்ன? அடுத்த நீதிமன்றம் இரவுச்சாப்பாட்டின் பின்பு கூடுமெனத் தீர்மானிக்கப்பட்டது. (தொடரும்)

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

## சர்வதேச தமிழர் கவியரங்கம்

-------------------

### கலைந்த கனவு!

பறக்கவிட்ட சமாதானப்புறா
சுட்டுவீழ்த்தப்பட்டது!
ஏந்திய வெள்ளைக்கொடி
காணாமல் போனது!
இனி மனித உடல்கள்
கழுகுகட்கே இரையாகும்!
தடைநீக்கம் ஆனை செரிக்கமுன்
அடங்கிவிட்டது!
மிஞ்சிய வாழ்வும் இனி
அஞ்சியதாச்சு!
கடல்மீன்களுக்கோ இனிக்
கொண்டாட்டம்!
அவைகளைத் தேடி இனி
வலைகளும் வராது!
மனிதஉயிர்களுக்கோ
திண்டாட்டம்! பதுங்க
வளைகளைத்தேடி ஓட்டம்!
குண்டுகள் துளைத்து
பூமிக்கு இனி ரத்த அபிசேகம்!
வானம் தன்செயல்பாட்டை மறந்து
வனாந்திரத்தில்
வெடியோசைகாணும்!
சமாதான பன்னீர் வடித்த கண்கள்
இனி கண்ணீர்அருவி பொழியும்!
கானல்நீரை கண்டவர் விழிகளில்
இனி கனல்நீர் காணலாம்!
வேதாந்தம் பேசியவர்
வேடிக்கை பார்த்தனர்!
கோசம் போட்டவர்
வேசம் கலைந்தன!
கோஷ்டி சேர்த்தவர்,
வேஷ்டி பறிபோனது!
தூக்கத்திலிருந்து கலைந்தது,
உறக்கம் மட்டுமல்ல,
தமிழர் கனவும் தான்!!

**கோட்டகுப்பம்-முகமது கவுஸ் குவைத்**

-------------------

### ஐம்பதிலும் ஆசை!

குழந்தையாய் பிறக்கஆசை-அதன்
குமிண்சிரிப்பில் திளைக்கஆசை
தெளிந்த நல்மனதில் ஆசை
தெவிட்டாத தமிழில் ஆசை!

காண்பதைப்பெறவோர் ஆசை-பின்
களைந்தெறிந்தழவோர் ஆசை!
சேர்ந்துவிளையாட ஆசை-பின்
சினங்கொண்டு பிரியஆசை!

அடம்பிடித்தழவோர் ஆசை-
அதற்காய்
அடிவாங்கி நோகஆசை
துடிதுடித் தோடி எங்கும்
துணிவுடன் புரள ஆசை

பயமது அறியாதெதையும்-தாள்
பற்றிட ஆசை இன்னும்
பட்டவேதனை மறந்து பரனை
பாடிட இவ்வைம் பதிலும் ஆசை!

கற்பனைகொண்டு உள்ளம்-இறை
களிப்புடன் இருக்க ஆசை,
கவலைகள்இன்றி நாளும்-புவியில்
கனிவுடன் வாழ ஆசை!

**ஆரையம்பதி க.சபாரத்தினம்**
**மாஸ்கோ-ரஷ்யா**

-------------------

### சுமை

பத்துமாதம் சுமந்தாள்
அவள் சுமந்தது...பாசச்சுமை!
இல்லம் சிறந்திட தன்னலமின்றி
தந்தை சுமந்தது...கடமைச்சுமை!
தொழிலாளிஉழைப்பால் நாடு உயர
வளம்பெறச்சுமந்தது...உயரியசுமை!
மேகம்சுமந்தது வானத்திலெனினும்
அதுவே உலகின் வளமானசுமை!
பசினுங்கொடுமை நீங்கிடவுலகில்
நெற்கதிர் சுமந்தது பசுமைச்சுமை!
கவலைகள்நீங்கிட கண்ணீர்சுமந்து
விழிகள் பெற்றது கனிவுச்சுமை!
இத்தனைக்கும்மேலாய் உயிர்களை
சுமந்துகாப்பது ஈசன் நேசச்சுமை!

**கவிச்சுடர் சு.இலக்குமணசுவாமி**
**மதுரை-6, தமிழ்நாடு**

-------------------

### காசே கொல்லும் உன்னை!

காசே செல்வம்!காசே செல்வம்
என எண்ணாதே-அந்தக்
காசை சேர்க்க ஆசைப்பட்டு
பாவஞ் செய்யாதே!
காசே தூசென்றெண்ணி வாழு
கவலை கொள்ளாதே!-அன்றி
காசே கொல்லும் ஓர்நாள் உன்னை
என்று நம்பி இரு!

தேசத்துரோகம்,சமூகத்துரோகம்
எல்லாம் காசாலே!
பாசம்அழிவதும் நேசம்மறப்பதும்
இந்தக்காசாலே!
மோதலடைவதும்,குடும்பப்பிரிவும்
எல்லாம் காசாலே -சிலர்
சோதனையாலே வேதனையாவதும்
எல்லாம் காசாலே!

வானப்பறவை காசைச்சேர்த்தா
உலகில் வாழ்கிறது!
கானமயிலும் காட்டுவிலங்கும்
காசைக்கண்டிலவே!
வானம் பொழியும் மழைநீர்கூட
காசுக்கா கிடைக்கிறது?
மானம் உள்ள மனிதர் காசை
மதிப்பதில்லை! கேளும்!!

துள்ளிமகிழும் மீனினம்கூட
காசைக்காணவில்லை!-நாம்
அள்ளிப்பருகும் நீரைப்பூமி
காசுக்கா தருகிறது?
ஓங்கிய மரநிழல்,பாங்குடன் கனிகள்
தென்றல் காற்றும்,இன்பநிலாவும்
என்றும் கதிரவன் ஒளியும்பெற்று
வான உலகில் திரவியம் சேரும்!

**நாவற்குழி நாகேந்திரன்-லண்டன்**

-------------------

### சாவது நம்தமிழர் விதியோ?

போலந்து நாட்டினிலே கிளியே!
பைந்தமிழர் ஆற்றை,கடக்கையிலே
அணையைத்திறந்ததனால் கிளியே
அள்ளுண்டு போயினரே...ஐயகோ!

ஜேர்மனி நாட்டினையே
பிரிக்கும் ஒட்ரா நதியினிலே
மூழ்கினர் நம்தமிழர்! கிளியே
மூச்சும் திணறிச் செத்தார்!

தஞ்சமும் கோரிவந்தார் அவரும்
நீந்தவும் தெரிந்திலரே- குளிரில்
விறைத்துச்செத்தனரே! கிளியே
வீணாய் இறந்தனரே!

சுவிசினில் ஒருதமிழர் கிளியே
காலை வேலைக்கு போகையிலே
மாடியின் உச்சியிலே ஒருவன்
தற்கொலைசெய்ய எண்ணி கிளியே

பாய்ந்தனன் கீழ்நோக்கி கிளியே
பைந்தமிழன் செத்தனனே!ஐயகோ!
பாய்ந்தவன் தப்பிவிட்டான்! கிளியே
நம்தமிழன் துடித்துச்செத்தனனே!

தமிழனின் தலைவிதியோ!கிளியே!
சாவதும் நம் எழுத்தோ?
இளந்தமிழர்உலகைவிட்டு கிளியே
போவதும் முறையாமோ???

**சசி.......................................நோர்வே**

-------------------

### வாழ எந்த முகமூடி?

வாழ எந்த முகமூடி?
.....................தெரியாது!
போலியாய் வாழ
.....................முடியாது!
விண்ணை முட்டும்
.....................எண்ணம் இல்லை!
பணம் பண்ணவும்
.....................ஆசை இல்லை!
பிறப்பிலேயே கொடுக்கப்பட்ட மனம்
.....................இதுவே பெருமனம்!

**புதுச்சேரி....................ச.வேல்முருகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு யாழ்ப்பாணத்து மரணஓலம்!

கனகபதி கணேசன்

எலலாம் ஆயிற்று!

செத்துப்போன அம்மாவின்
பாதங்களை இணைத்து
கால் பெருவிரல்களில்
கட்டுப் போட்டாயிற்று!

கிழக்காசிய நாடு ஒன்றில்
வேறு பெயரில் வேறு மனிதனாய்
வாழ்ந்து கொண்டிருக்கும்
கணவனுக்கு
போன் செய்யச் சொல்லி
கொழும்புவுக்கு ஆள் அனுப்பியாயிற்று!

தகவல் கிடைத்தாலும்
பணம் தான் வரும்;
ஆளவராது என்பது
அவளுக்குத் தெரிந்ததே!

ஊருக்கும உறவுககும்
சொல்லி அனுப்பியாகிவிட்டது!
இன்னும் கொஞ்ச நேரத்தில்
எல்லோரும் வந்து விடுவார்கள்!

எல்லாம் ஆயிற்று!

கண்களின் மையப் புள்ளியில்
பதிந்திருந்த குண்டை
எடுக்க வேண்டாம் என்று
இவளே -
டாக்டரிடம் சொல்லியிருந்தாள்!

மரண விசாரணை அறிக்கையிலும்
அதைக் குறிப்பிடும்படி
வேண்டிக் கொண்டாள்!

இதைக் காரணம் காட்டியே
நாளை யாராவது
ஐரோப்பிய நாடு ஒன்றில்
அடைக்கலம் கோரலாம்!

மரணத்தின் செய்தி எல்லோர்
முகத்திலும் எழுதப்பட்டிருக்க;
அம்மாவின் முகத்தில் மட்டும்
முத்திரையாய்ப் பதிந்திருந்தது!

"சுண்ணம்" இடிக்க
உரலும் உலக்கையும்
பக்கத்து "சோமர்"
வீட்டில் இரவல் வாங்கி
வந்து போட்டாயிற்று!

யார் வேண்டுமானாலும்
இறந்து போகலாம்!
ஆனால -
மரணம் மட்டும்
வாழ்ந்து கொண்டிருக்கும்!

நோர்வே நாட்டின்
உணவு விடுதி ஒன்றில்
பீங்கான் தட்டுக் கழுவும்
இயந்திரம் ஒன்றின் எடுபிடியாய்
இருக்கும் மூத்த மகனுக்கு;
செய்தி அனுப்பும் பணியை
வாத்தியார் "வளையல்"
பெரு மனதுடன் ஏற்றுக் கொண்டார்!
அங்கிருந்து -
அவன் அனுப்பும் பணம்
அவர் அக்கவுண்டுக்குத்தான் வரும்!

பறையடிக்க "ரத்தினத்து"க்கும்
சவக்கிரியை செய்யப்
பிள்ளையார் கோவில் ஐயருக்கும்
இவளே போய் -
செய்தி சொல்லி வந்தாள்!

எல்லாம் ஆயிற்று!

இந்தியாவில் ஆங்காங்கே
அகதிகளையும் அதிதிகளாயும்
அலைந்திருக்கும் உறவினர்கள்
எல்லோருக்கும் தகவல் சொல்ல,
"கட்டை வாத்தி"
தன்னைத் தானே
நியமித்துக் கொண்டார்!

எல்லாத் தேசங்களிலும்
உதிர்மும் உறவும்
பிரிந்திருக்க - இவளும் தாயுமே
தாயகத்தில் தனித்திருந்தனர்!
இப்போது இவள் மட்டும்!

அவுஸ்திரேலியாவில்
மாட்டுப் பண்ணை ஒன்றில்
புல் வெட்டிக் கொண்டிருக்கும்
கடைசித் தம்பிக்கும்
செய்தி அனுப்பியாகி விட்டது!

சித்தி பெண்கள் ராணியும் கலாவும்
பெரியம்மாவுக்கு மாலை
கட்டிக் கொண்டிருக்கின்றனர்!

எல்லாம் ஆயிற்று!

என் தம்பி எவ்வளவு
பணம் அனுப்பினான்;
என் புருஷன் என்ன
பார்சல் அனுப்பினான்;
என் மகன் எவ்வளவு
பணம் அனுப்பினான்;
யாழ்ப்பாணத்தின் -
பொருளாதாரச் சந்தை ஒன்று
இன்றைய இழவு வீட்டில்
அரங்கேற இருக்கிறது!

எல்லாம் ஆயிற்று!

தமிழகத்தில் மருத்துவம்
படிக்கும் இளைய மகள்
அனுப்பிய புதுப்புடவை
தாயாரின் இறுதிப் பயணத்துக்குத்
தயாராக இருக்கிறது!

எதிர் வீட்டுப்
பரமு அண்ணார்
கொடுத்துச் சென்ற
பணக் கட்டுப் பையில்
தயாராக இருக்கிறது!
தம்பிகள் பணம் அனுப்பியதும்
திருப்பிக் கொடுக்க வேண்டும்!
வட்டி போட்டு!

எல்லாம் ஆயிற்று!
எல்லா ஏற்பாடுகளும் தயார்!
இனி அழ வேண்டியது தான்!

அம்மா! ஐயோ! அம்மா!

**இதயம் ஆகஸ்ட் 15.95**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பாரதியின் பரம்பரை

**டாக்டர் வ. மாசிலாமணி,**
**அண்ணா பல்கலைக்கழகம்**

வோர்ஸ்வொர்த்தின் இயற்கை ரசனையும்,கீட்ஸின் அழகுணர்ச்சியும் பைரனின் காதல்நயமும்,ஷெல்லியின் புரட்சிக்கனலையும்,ஒன்றாய்க்கூட்டி மெருகேற்றினால் வருவதுதான் பாரதி!சுமார் 40 ஆண்டுகளே வாழ்ந்து இந்தநூற்றாண்டின் இருபதுகளிலே பாரதி மறைந்துவிட்டாலும் ஒரு நீண்டநெடிய பாரம்பரியத்தை பாரதியால் விட்டுச்செல்லமுடிந்தது.(மேலே குறிப்பிட்ட 5 கவிஞர்களின் சராசரி வயதும் 35 ஐத் தாண்டாது.இத்தகைய கவிஞர்கள் சிந்தனைச்செழுமையுடன், முறுக்கிய இளமையின் சூறாவளியாய்,பெருவெள்ளமாய் கொட்டியபின்—வேலை முடிந்தது—என்று வெளியேறிவிடுகிறார்களோ?)

பாரதியின் புரட்சிக்கனலின் புதல்வனாக வந்தவர்தான் பாரதிதாசன்! வெள்ளையரின் ஏகாதிபத்தியவெறியிலிருந்து இச்சமுதாயத்தை வெளிக்கொணர்வதே பாரதியின் மூச்சு! வெள்ளையர்கள் போனபின்பும்,கருப்புத்துரையான மேல்மட்டசாதியினரிடம் அடிமைப்பட்டு,மூடப்பழக்க வழக்கங்களினால் அறிவை விற்று வாழ்ந்துகொண்டிருந்த இந்நாட்டு மன்னர்கள் எழுச்சிபெற சாட்டையைச் சொடுக்கிக்கொண்டு வந்த தளபதி தான் பாரதிதாசன்!

நீண்டஉருவம்,நிமிர்ந்த நடை,நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச்செருக்கு!—இவை பாரதிதாசனின் புறத்தோற்ற வர்ணனை மட்டுமல்ல,அவர் கவிதையின் தோற்றமும் ஆகும்.இதோ ஒரு குழந்தைத்தாலாட்டு:

மூடத்தனத்தின் முடைநாற்றம்
வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப்
பெட்டகமே!
வேண்டாத சாதி இருட்டு
வெளுப்பதற்குத்
தூண்டாவிளக்காய்த் துலங்கும்
பெருமாட்டி
புண்ணில் சரம்விடுக்கும் பொய்
மதத்தின் கூட்டத்தை
கண்ணில் கனல்சிந்திக் கட்டழிக்க
வந்தவளே!
சாணிக்கு பொட்டிட்டு சாமி என்பார்
செய்கைக்கு
நாணி உறங்கு! நகைத்து நீ
கண்ணுறங்கு!



### புரட்சிக்கவிஞரின் கருத்துக் குவியல்! ஏற்றுப் போற்றிட எழுவீர்!

"புரட்சிக் கவிஞரின் பாடல்களைப் படிக்கும்போது அவை நம்முடைய இரத்தத்தில் இரத்தமாகக் கலக்கின்றன; உணர்ச்சி நரம்புகளிலேயே ஊற்றெடுக்கின்றது; படிக்கின்றோம். பாரதிதாசனாகின்றோம். காலத்தை உருவாக்கிய கவிஞர் மட்டுமல்ல; காலத்தையே மாற்றியமைப்பவர்; புதுமையும் புரட்சி மனப்பான்மையும் மிக்க பாடல்களைத் தரும் நம்கவிஞர் உயிர்க்கவி, உண்மைக்கவி — புதுக்கவிதை பாடிய புதுமைக்கவி. எளிய மக்களின் தளையையும் பிய்க்கும்படியான புரட்சிக் கவிஞரின் புதுக்கவிதைகளைப் படிக்க வேண்டும், பாட வேண்டும்; பயன் பெறவேண்டும்; புதுக் கவிதைகளைப் புரட்சிக்கவி போல பாடி முன் வரவேண்டும்."

பேரறிஞர் அண்ணா (1945)

இளம் விதவைகளின் மறுமணம் இவருடைய முழக்கங்களில் முக்கியமானதொன்று:

கோரிக்கையற்றுக்கிடக்குதண்ணே
வேரிற்பழுத்த பலா!

அதேபோலக் காதல்திருமணம்,கலப்புத்திருமணம் இரண்டையும் இவர் போற்றி வலியுறுத்துகிறார்.

காதல்அடைதல் உயிரியற்கை—அது
கட்டில்அகப்படும் தன்மையதோ—அடி
பேடிவழக்கங்கள் மூடத்தனம்—இந்தப்
பீடைகளே இங்கு சாத்திரங்கள்!

பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. பாரதிதாசன் வாழ்ந்தகாலம் தமிழகத்தின்,சுயமரியாதைக்கழகமும், திராவிடர்இயக்கமும் எழுச்சிபெற்றுக் கொண்டிருந்த காலம். இந்தியாவிலிருந்து,திராவிடநாடு துண்டிக்கப்பட்டு,சுதந்திர திராவிடநாடு என்ற ஒரு தனிநாடு அமைத்து வாழ்ந்தால் தான் திராவிடமொழிகளனைத்துக்கும் தாயான,தமிழ் தளைக்கும், என்று ஒருபான்மை அரசியலாரும், நிறையமக்களும் நம்பியிருந்தகாலம் அது!(1940—67)ஆரிய ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்தபுயலில்,கம்பராமாயணம் கூட கஷ்டப்பட்டகாலம் அது!

இந்த இயக்கத்தின் "அரசவைக்கவிஞராகவே" (mouth piece) பாரதிதாசன் விளங்கியிருக்கிறார்.அதன் காரணமாகவே இலங்கைஅரசன் இராவணனை வீரத்தமிழன் என்று போற்றிப்பாராட்டுகிறார்.(இந்தச்சூழல் காரணமாகத்தான் கம்பரின் இராமகாவியத்துக்கு எதிராக பாவலர் பாலசுந்தரம் இராவணகாவியம் எழுதினார்.)

குள்ளநரிச்செயல் செய்யும் கூட்டத்தின்
கூற்றம்
என்தமிழர் மூதாதை!
என்தமிழர் பெருமான்
இராவணன் காண்!
அவன் நாமம்,
இவ்வுலகம் அறியும்!

இவருடைய தீவிர திராவிட பகுத்தறிவுக்கொள்கைகாரணமாக நிறைய போற்றுதல்,தூற்றுதலுக்கும் ஆளான கவிஞர் இவர். இப்படிச்சொல்வதால் அழகுணர்ச்சியோ,கற்பனை வளமோ இவர் பாட்டில் இல்லை என்பதல்ல!

கூடத்திலே மனப்பாடத்திலே விழி
கூடிக்கிடந்திடும் ஆணழகை
ஓடைக்குளார்மலர்ப்பார்வையினால்—அவள்
உண்ணத்தலைப்படும் நேரத்திலே
பாடம்படித்து நிமிர்ந்தவிழி—தனில்
பட்டுத்தெறித்தது மானின் விழி
ஆடைதிருத்திநின்றாள்அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்!

என்னஅழகு!என்ன நயம்!அற்புதம்! எனினும் இவையாவும் இடிமுழக்கத்தின் இடையே கருமேகமோதல்களில் ஓடி மிளிரும் மின்னல் போன்றவை!

ஏனென்றால் பாரதிதாசன் எனில் அவர் சமுதாயச்சீர்திருத்தக் கவிஞர்,என்பதே ஒரேவரிப்பட்டயம்!



நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் யுனெஸ்கோ.பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





a) Successful completion of upper secondary education
b) Good command of English,
c) Successful studies at upper secondary school level and sometimes also at university level in subjects relevant to the programme of interest.
d) A pass of the one-year Preparatory Swedish Language Course. Please note that the number of places for this particular admissions procedure is limited.

The higher education system is currently undergoing fundamental changes for under its "Quality through Freedom" Bill, the Swedish government has outlined a strategy which is designed to strengthen Sweden as a knowledge-based nation. Furthermore, universities and university colleges will become more independent of the government and parliament.

The application deadline is December 1st 1995 for studies beginning in August/September 1996. Applications for studies and residence permits must be submitted to the Swedish Embassy/Consulate in your country.

The Swedish Institute
Box 7434
S-103 91 Stockholm

Applications forms can be obtained from the National Agency for Higher Education, Admissions Department, Box 7853, S-103 99 Stockholm, Sweden or the Swedish Embassies/Consulates or the universities/university colleges

Applications for first degree programmes and single subject courses taught in Swedish are administered by the National Agency for Higher Education

The National Academic Mobility Information Centre (NAMIC) which is an information centre for international exchange within education and research.

The Swedish Institute publishes a wide range of leaflets and brochures in English

**Borås University College**
International Secretary
Box 874
S-501 15 Borås
Sweden

**Chamlers University of Technology**
S-412 96 Göteborg
Sweden

**Flaun/Boränge University College**
Box 2004
S-791 02 Falun
Sweden

**Gotland College of Higher Education**
Norra Hansegatan 16 A
S-621 42 Visby
Sweden

**Gävle/Sandviken University College**
International Office
Box 6052
S-800 06 Gävle
Sweden

**Göteborg University**
Vasaparken
S-411 24 Göteborg
Sweden

**Halmstad University College**
Box 823
S-301 18 Halmstad
Sweden

**Jönköping University College**
Box 1026
S-551 11 Jönköping
Sweden

**Kalmar University College**
Box 905
S-391 29 Kalmar
Sweden

**Karlskrona/Ronneby University College**
Box 321
S-371 79 Karlskrona

**Karlstad University College**
International Office
Box 9501
S-650 09 Karlstad
Sweden
Karolinska Institute
S-104 01 Stockholm
Sweden

**Kristianstad University College**
Box 59
S-291 21 Kristianstad
Sweden

**Linköping University**
International Secretariat
S-581 83 Linköping
Sweden

**Luleå University**
International Office
S-971 87 Luleå
Sweden

**Lund University**
International Student Office
Box 117
S-221 00 Lund
Sweden

**Mid-Sweden University College**
Härnösand
S-871 88 Härnösand

**Sundsvall**
S-851 70 Sundsvall

**Österund**
S-831 25 Östersund
Sweden

**Målardalen University College**
Box 11
S-721 03 Västerås
Sweden

**Royal Institute of Technology**
Educational and Planning Division
S-100 44 Stockholm
Sweden

**Royal University College of Music**
Valhallavägen 103-109
S-115 31 Stockholm
Sweden

**Skövde University College**
Box 408
S-541 28 Sköde
Sweden

**Stockholm Institute of Education**
International Office
Box 34103
S-100 26 Stockholm
Sweden

**Stockholm School of Economics**
Box 6501
S-113 83 Stockholm
Sweden

**Stockholm University**
S-106 91 Stockholm
Sweden

**Stockholm University College of Acting**
Box 20044
S104 60 Stockholm
Sweden

**Stockholm University College of Opera**
Strandvägen 82
S-115 27 Stockholm
Sweden

**Stockholm University College of Physical Education and Sports**
Box 5626
S-114 86 Stockholm
Sweden

**The Swedish University of Agricultural Sciences**
Student Counsellors Office
Box 7070
S-750 07 Uppsala

**Trollhättan/Uddevalla University College**
Box 277
S-461 26 Trollhättan

**Umeå University**
Student Counsellors Office
S-901 87 Umeå
Sweden

**University College of Arts, Crafts and Design**
Box 27116
S-102 52 Stockholm
Sweden

**University College of Dance**
Danshögskolan
Box 27043
S-102 51 Stockholm
Sweden

**University College of Fine Arts**
Fredsgatan 12
Box 16317
S-103 26 Stockholm
Sweden

**University College of Management in Graphic** Production and Public Relations (GI/IHR)
Box 27094
S-102 51 Stockholm
Sweden

**University College of Theatre, Film, Radio and Television**
Dramatiska Institutet
Box 27090
S-102 51 Stockholm
Sweden

**Uppsala University**
Student Counsellors Office
Box 256
S-751 05 Uppsala
Sweden

**Växjö University College**
The International Office
S-351 95 Växjö
Sweden

**Örebro University College**
The International Secretariat
Box 923
S-701 30 Örebro



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை : **"எங்களை வாழவிடுங்கள்."**

பொன். சிவா
எகர்சுண்ட், நோர்வே

ஜனா கைக்கடிகாரத்தைப் பார்த்தான் நேரம் பத்து மணியாகியிருந்தது இன்னும் இருபது நிமிடங்கள் இருக்கின்றது விமானம் புறப்படுவதற்கு. ஒரு இனம் புரியாத சந்தோஷம் அவன் மனதை ஆட்கொண்டது. நீண்டகால இடைவெளிக்குப் பின் தாய்நாட்டைப் பார்க்கப் போகின்றோம் என்ற ஆனந்தம் அது. விமானத்தின் ஜன்னல் அருகில் உட்கார்ந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அருகிலேயிருந்த அவனது தங்கையும், தம்பியும் ஒரு இனிப்புப் பையை வைத்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். மெதுவான குரலில் அவர்களை அதட்டி அந்தப் பையை வாங்கி ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு மீண்டும் திரும்பி ஜன்னல் பக்கம் உட்கார்ந்து கொண்டான். விமானம் புறப்பட்டு தரையைவிட்டு ஆகாயம் நோக்கி மெதுவாகப் பறக்க ஆரம்பித்தது. சில வருடங்களாவது அவன் நடந்து திரிந்த இந்த நாட்டு மண்ணையும், மலைகளையும், தன்னுடன் பழகியவர்களையும், கூடப் படித்தவர்களையும் ஒரு கணம் நினைத்து வேதனைப் பட்டான். தன் தாய், தந்தையைத் திரும்பிப் பார்த்தான்-சோகமே உருவாக அமர்ந்திருந்தார்கள். தாடையில் கையை வைத்தபடி கண்ணிமைக்கக் கூட மறந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்கள். அப்போதுதான் அந்த நாள் அவனுக்கு நினைவு வந்தது..

மாலை நான்கு மணிக்கு வேலைக்குப் போய் வந்து உணவருந்திவிட்டுச் சோபாவில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் அவன் தந்தை பஞ்சலிங்கம் அவர் அருகில் வேலையால் வந்த களைப்புடன் படுத்திருந்தாள் அவன் தாய் மகேஸ்வரி. ஜனாவின் பார்வை தொலைக்காட்சி மீதிருந்தது. தொலைபேசியின்மணிச்சத்தம் பஞ்சலிங்கத்தின் அமைதியைக் குழப்ப அதை எடுத்துக் காதில்வைத்தார் அவர். அவரது நண்பன் கணேசன் வடநோர்வேயின் ஒரு நகரத்திலிருந்து பேசினார். அரைமணி நேரமாக அவர்கள் பேச்சு நீடித்தது. தந்தையின் முகத்திலும், பேச்சிலும் அதிர்ச்சியும், ஆச்சரியமும் மாறி மாறி வருவதை ஜனா அவதானித்தான். தொலைபேசியை வைத்தவர் சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை. "என்னப்பா பேசாமல் இருக்கிறியள் ஆர் ரெலிபோனில" படுத்திருந்தவாறே கேட்டாள் மகேஸ்வரி. "கணேசன் இருக்கிற இடத்தில சில பிரச்சினையள் நடந்திருக்கு மூண்டு நாளா நடக்குதாம் எங்களுக்குத் தெரியாமப் போச்சுது" என்றார் அவர் " என்ன பிரச்சினையாம்" மகேஸ்வரி கேட்டாள். "ரெண்டு மூண்டு வெளிநாட்டு ஆக்களின்ர வீட்டுக்குள்ள புகுந்து எல்லாம் அடிச்சு உடைச்சுப் போட்டாங்களாம் தமிழருக்கும் சேர்த்துத்தான் கனபேர் ஆஸ்பத்திரியிலையாம் ஒரு வீட்டையும் கொளுத்திப் போட்டாங்களாம். நாட்டைவிட்டு வெளியபோகாட்டி சுட்டுப்போடுவம்/எண்டு கணேசனை மிரட்டிப்போட்டுப் போனவங்களாம். அங்க இனி இருக்கேலாதாம் அதுதான் அவையள் ஊருக்குப் போகப் போயினமாம்" என்று பஞ்சலிங்கம் சொன்னதுமே மின்னல் வேகத்தில் எழுந்து உட்கார்ந்தாள் மகேஸ்வரி. தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனாவின் காதுகளிலும் இவை புகுந்தன. "ஏன்தான் இந்த வெள்ளைக்காரங்களும் இப்பிடியோ மனிதநேயம், மனிதாபிமானம், மனிதசுதந்திரம் என்று பேசிக்கொண்டு ஏன் இப்படி இனப்பிரிவினை, நிறப்பிரிவினை என்று பேதம் காட்டுகிறார்களோ. எல்லோரும் மனிதர்தானே இனம், மதம், மொழி, நிறத்தினால் வேறுபட்டிருந்தாலும் குருதி எல்லோர்க்கும் ஒன்றுதானே" என்று அவன் மனதில் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. தாய், தந்தையின் கலக்கத்தைப் பார்த்ததும் மனதினுள் சிரித்துக் கொண்டான்."தலையிடியும் காச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்" என்பார்கள் அதேபோல சில வருடங்களுக்கு முன் "இலங்கையிலே பிரச்சினை முடிந்து விட்டது தமிழர்களைத் திருப்பியனுப்பப் போகிறோம்" என்று இந்நாட்டு அரசு சொன்னபோது இவ்வளவு கலக்கம்கொண்டதில்லை. "எங்களுக்கு இந்நாட்டுப் பிரஜா உரிமை கிடைச்சிட்டுதானே எங்களுக்குப் பிரச்சினையில்லை ஆரெண்டாலும் போகட்டும்" என்று அவர்கள் அலட்சியப் படுத்திக் கொண்டார்கள் ஆனால் இன்று நாங்களாகவே வெளியேற வேண்டிய நிலை. என்று ஒரு கணம் மனதினுள் நினைத்துக்கொண்டான்.

இரவு படுக்கைக்குப் போன பஞ்சலிங்கத்திற்கும் மகேஸ்வரிக்கும் உறக்கம் வரவில்லை. அடுத்து என்ன செய்வோம் அங்கு நடந்த அதே பிரச்சினை இங்கும் நடந்தால் என்ன செய்யலாம்? அநியாயமாக உயிரிழக்க வேண்டிய நிலை வருமா? என்ற கேள்விகள் பஞ்சலிங்கத்தின் மனதில் அலைகளாக வந்து மோதின. "நாட்டுக்குத் திரும்பிப்போக வேண்டிய நிலை வந்தால் பிள்ளைகளை என்ன செய்வது இந்த நாட்டில் இந்த நாட்டுக் கலாச்சாரத்தையும், இந்த நாட்டு மொழியையும் படித்தவர்கள் ஊருக்குப் போனால் எப்படிப் படிக்கப் போகிறார்கள். அவர்களின் எதிர்கால வாழ்வு பாழாகிவிடுமே என்ன செய்வது" என்ற எண்ணம் மகேஸ்வரியின் மனதில் வந்து வந்து போனது. வேற்றுநாட்டில், வேறுகலாச்சாரத்தின் மத்தியில், வேற்றுநாட்டு மொழியைப் படித்தவர்கள் தாய்நாட்டில் சொந்தத் தாய்மொழியை, கலாச்சாரத்தை, பண்பாட்டைப் படிக்கமாட்டார்களா? சொந்தத் தாய்நாட்டுக்குப் போவதால் எதிர்கால வாழ்வு பாழாகிவிடுமா? என்பதை மகேஸ்வரி நினைக்கவில்லை. இரவு மூன்றுமணி திடீரென தொலைபேசியின் மணிச்சத்தம் இரவுநேர அமைதியைக் கிழித்தது. "இந்த நேரத்தில ஆர் எடுக்கிறது" என்றவாறே கட்டிலின் மேல்புறத்தில் மாட்டியிருந்த அதை எடுத்துக் காதில் வைத்தார் பஞ்சலிங்கம். "ஹலோ பஞ்சு நான் குலசிங்கம் கதைக்கிறன் ஆரோ எங்கட வீட்டுக்கு கல்லாலையும் போத்திலாலையும் எறிஞ்சு போட்டாங்கள். ஜன்னலும் உடைஞ்சுபோச்சு பொலிசுக்கு ரெலிபோன் எடுத்துச் சொல்லியிருக்கிறன் நீங்களும் கவனமா இருங்கோ நான் பிறகு எடுக்கிறன் இப்ப வைக்கிறன்" என்று சொல்லிவிட்டு வைத்தார் அவர். வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததுபோல இருந்தது பஞ்சலிங்கத்திற்கு. இங்கும் பிரச்சினை வந்துவிட்டது அதனை மனைவிக்கும் சொன்னார். "நீ போய் பிள்ளையளை எழுப்பிக் கொண்டு வாப்பா இந்த அறைக்குள்ள எல்லாரும் இருப்பம் விடிஞ்சபிறகு மற்றதை யோசிப்பம்" என்று அவர் சொன்னதும் பிள்ளைகளை எழுப்பிக் கொண்டு வந்த மகேஸ்வரி நடந்தவைகளை ஜனாவுக்கும் சொன்னாள். சிறிதுநேரம் யோசித்த பஞ்சலிங்கம் "வேண்டாம் இனி யோசிக்கிறதில பிரயோசனமில்லை நாங்க உயிரோட இருக்க வேணுமெண்டா நாட்டுக்குப் போறதுதான் நல்லது" என்று முடிவெடுத்தனர். தமது அத்தியாவசிய தேவைக்கு மட்டும் சில சாமான்களை எடுத்துக்கொண்டு மறுநாள் காலையே புறப்பட்டனர்.

www.tamilarangam.net

இந்த நாட்டைவிட்டுப் போவதற்கு பஞ்சலிங்கத்திற்கும் மகேஸ்வரிக்கும் விருப்பமேயில்லை. இந்த வாழ்க்கையும், பணமும் இனி எங்கள் நாட்டில் எப்படி? எப்போ?? இங்கே இருவரும் வேலை செய்தால் நல்ல வருமானம் வரும் குழந்தைகளுக்கு மாதம் மாதம் அரசாங்க உதவிப்பணம்...... இவையெல்லாம் இனி எப்போ?? இந்த நாட்டைவிட்டுப்போக எப்படி மனம்வரும். "விமானம் தரையிறங்கப் போகிறது எல்லோரும் உங்கள் பட்டிகளை அணிந்து கொள்ளுங்கள்" என்ற அறிவித்தல் ஜனாவின் நினைவுகளைக் கலைத்தது. தாய்நாட்டுக்கு வந்துவிட்டோமே என்ற சந்தோஷம் அவனுக்கு. எட்டிப்பார்த்தான் தொலைவிலே தெரிந்த காடுகள், மலைகள், மாடிக்கட்டடங்கள், வீடுகள் எல்லாம் விமானம் தரையிறங்க இறங்க அணமித்துக் கொண்டு வந்தன. அவன் இந்த நாட்டைவிட்டுப் போனபோது அவனுக்கு ஆறு வயது. பதினொரு வருடங்களின்பின் அவன் திரும்பி வருகின்றான். நிச்சயமாகப் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். விமானத்தளத்தை விட்டு வெளியே வந்தனர் குளிர்காற்றினையே சுவாசித்துப் பழக்கப்பட்டுப் போன ஜனாவுக்கு இதமாக வீசிய வெப்பக்காற்று ஒரு சுகத்தினைக் கொடுத்தது. வாடகைக் கார் ஒன்றைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தனர். அங்கே பஞ்சலிங்கத்தின் வயது முதிர்ந்த தந்தையும், தாயும் இருந்தனர். மகன், மருமகள், பேரக்குழந்தைகளைக் கண்டதும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

நாட்கள் நகர்ந்தன ஜனாவுக்குப் புதுப்புது நண்பர்கள் கிடைத்தனர். பஞ்சலிங்கத்திற்கும் மகேஸ்வரிக்கும் வெளிநாட்டு வாழ்வை மறக்க முடியவில்லை. பஞ்சலிங்கம் குடும்பத்தினரைப் போலவே வேறும்பல மேலை நாடுகளிலிருந்தும் பலர் நாடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் மகேஸ்வரியின் தங்கை கனடாவிலிருந்தும், பஞ்சலிங்கத்தின் தம்பி ஜேர்மனியிலிருந்தும், அவரது மைத்துனர் பிரான்சிலிருந்தும் வந்திருந்தனர். பல வருடங்களின்பின் அவர்கள் சந்தித்ததால் ஒருவரையொருவர் சுகம் விசாரித்துக் கொண்டனர். ஆனால் குழந்தைகளுக்கிடையில் மட்டும் பெரிய திண்டாட்டம் ஒருவருடன் ஒருவர் பேசமுடியவில்லை காரணம் மொழிப் பிரச்சினை. புன்னகை ஒலியின்மூலம் மட்டும் அவர்கள் அறிமுகமாகிக் கொண்டனர். ஒவ்வொரு பெற்றோர்களும் அவர்களைத் தாங்கள் இருந்த அந்தந்த நாட்டு மொழிகளின்மூலம் உறவுகளை விளக்கப்படுத்தினர். இருந்தாலும் ஆசைதீர ஒருவருடன் ஒருவர் பேசி விளையாட முடியவில்லையே என நினைக்கும்போது குழந்தைகளுக்கு மனதினுள் வேதனையாக இருந்தது. காலச்சக்கரம் சுழன்றது சிறுவயதிலிருந்தே மேலைநாட்டுக் காலச்சாரத்தில் வாழ்ந்து பழக்கப்பட்டுப்போன ஜனாவுக்கு தாய்நாட்டுக் கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் புதுமையானதாகவும் வாழ்வுக்கு நல்ல வழிகாட்டிகளாகவும் தோன்றின. " இவைகளையெல்லாம் அப்பா, அம்மா எனக்குச் சொல்லித்தர வில்லையே தாய்மொழியைக் கற்றுக் கொடுப்பதில்கூட அக்கறை காட்டவில்லையே ஆனால் கொஞ்சமாவது என்னால் தமிழ்மொழி கதைக்க முடிவதையிட்டு நான் சந்தோஷப் படுகின்றேன்" என அவன் நினைத்துக் கொண்டான். தாய், தந்தையை நினைக்க கோபம், கோபமாக வந்தது அவனுக்கு. ஒருநாள் பஞ்சலிங்கத்தின் வீட்டில் எல்லோருக்கும் விருந்துபசாரம் நடந்துகொண்டிருந்தது. குழந்தைகள் எல்லோரும் தட்டுத்தடுமாறி ஓரளவாவது தமிழ்மொழி கதைக்கக் கற்றுக் கொண்டனர். முற்றத்தில் நின்ற மாமரமொன்றிலே அவர்கள் ஊஞ்சல்கட்டி விளையாடிக் கொண்டிருந்தனர் வெளிவிறாந்தையில் உட்கார்ந்தபடியே அவர்களைப்பார்த்துக் கொண்டிருந்தான் ஜனா.

"ஏன் தம்பி உதில தனிய இருக்கிறாய் போய் சித்தியின்ர பிள்ளையளோட கதையன்" மகேஸ்வரி சொன்னாள். அதைக்கேட்டதும் ஜனாவுக்கு கோபம் அதிகமானது இத்தனை காலமாக அவனது மனதினுள் உறைந்துகிடந்தவை வார்த்தைகளாக வெளிவர ஆரம்பித்தன " எப்பிடிப் பேசுறது ஊமைப்பாஷையிலா? நீங்கதான் எங்களுக்குத் தமிழ்கற்றுத் தரவில்லையே எப்பிடிப்பேசமுடியும். வெளிநாடுகளில இருந்தப்போ தமிழ்மொழி கற்றுக்கொடுக்க வேணுமெண்டு உங்களில யாராவது நினைச்சீங்களா?" என்ற ஜனாவின் பேச்சைக் கேட்டு எல்லோரது பார்வையும் அவன்மேல் திரும்பியது. "வெளிநாடுகளுக்குப் போயிட்டா இனி அதுதான் உங்களுக்கு நிரந்தரம், சொந்தநாடு எண்டு எல்லாரும் நினைக்கிறீங்க. உங்களுக்கெண்டு ஒரு சொந்தநாடு, சொந்தமொழி இருக்கெண்டதையே மறந்திடுறீங்க. எங்களுக்காவது சொல்லித் தந்திருக்கிறீங்களா? இப்போ என்ன நடந்தது அவங்கள் அடிக்க ஆளைவிட்டாப் போதுமெண்டு நீங்களாகவே ஓடி வந்திட்டீங்க". என்ற அவனது ஆவேசப் பேச்சு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் கவனத்தையும் ஈர்த்தது. அவர்கள் எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். " இதோ பார்த்தீங்களா என்னைச் சூழ்ந்து நிக்கிற எல்லோருமே என் உறவினர்கள் அவர்களோட ஆசைதீரப்பேச முடியல்ல. இதோ நிக்கிறானே சித்திமகன் என் சகோதரன் அவனோட பேச முடியல்ல. ஊமைப்பாஷையிலும் அரைகுறைத் தமிழிலும் பேசவேண்டியிருக்கு. நீங்களும் அக்கறை காட்டல்ல சித்தியும் அவனுக்குத் தமிழ்தெரிய வேணுமெண்டு நினைக்கல்ல. வெளிநாட்டில வாழுற எங்கட பிள்ளையளுக்கு இனி ஏன் தமிழ்மொழி தெரிய வேணுமெண்டு நினைச்சீங்க. ஆனா இப்போ....... நினைக்க நினைக்க என் மனது எவ்வளவு வேதனைப்படுது தெரியுமா?" அவன் கண்கள் கலங்கின

"உங்களுக்குத்தேவை பணம் ஒண்டுதான் பணம் பணம் எண்டுதான் காலந்தோறும் அலையிறீங்களே தவிர குடும்பத்தைப் பற்றி குழந்தைகளின் எதிர்காலம் பற்றி நினைக்கிறதுண்டா? இல்லையே. நாளைக்கு நான் வீதியில அடிபட்டுக் கிடந்தா உங்களுக்கு எவருமே வேண்டாம் எண்டு உங்க பணத்தை அள்ளி வீசுங்க அந்தப் பணம் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் ஆஸ்பத்திரியில சேர்க்குதா பாப்பம். முதல்ல மனுஷன்தான் முக்கியம் அதை மறக்காதீங்க. ஒரு மனுஷனை மனுஷனா மதியுங்க ஒருவன் செய்த உதவியை எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறக்காதீங்க. அப்பத்தான் திரும்பவும் ஒருநேரத்தில உங்களுக்கு உதவிசெய்ய வேணுமெண்டு அவன் நினைப்பான். அன்புக்கு அடிபணிஞ்சு நடந்தா அவனை அடிமையாக்க நினைக்காதீங்க. இதையெல்லாம் விட்டுப் பணம் பணம் எண்டு அலையாதீங்க. வாழ்க்கைக்குத்தான் பணம் தேவையே தவிர பணத்துக்காக

www.tamilarangam.net

வாழ்க்கையில்லை. ஒருவன் செய்த நன்றியை மறந்து குத்தல் பேச்சுக்களும் நளினக் கதைகளும் பேசாதீங்க ஏன் என்றால் "தீயினால் சுட்ட புண் ஆறிடும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" இதை நீங்க சின்ன வயசில படிச்சிருப்பீங்க. நீங்க பேசுற குத்தல் பேச்சுக்களை விளங்கிக்கொள்ளாம இருப்பதற்கு மற்றவன் எல்லோருமே முட்டாளாக இருப்பான் என்று நினைக்காதீங்க. அதுதான் உங்களுக்கிடையில மனஸ்தாபங்களும், கோபங்களும், விரக்திகளும் உண்டாகிறதுக்கு காரணம்". ஜனாவின் பேச்சு அங்கிருந்த அனைவருக்குமே அறிவுரை கூறுவதுபோல இருந்தது. இங்கு வந்த சிறிது காலத்திலுள் இவன் எப்படி இதையெல்லாம் கற்றுக்கொண்டான். நாலும்தெரிந்தவனைப்போலப் பேசுகின்றானே' என பஞ்சலிங்கம் மனதிலுள் நினைத்தபோது "எங்க தமிழ் சமுதாயத்தில ஒரு பெண்குழந்தை எப்படி வளரக்கூடாது என்பதற்கு உதாரணம் என் தங்கை. அடங்கி, ஒடுங்கி, அடுப்படிமூலையில அடக்கமா இருக்கவேணுமெண்டு நான் சொல்லல்ல அதெல்லாம் அந்தக்காலம் தம்பியுடனோ, என்னுடனோ சண்டைபோடும்போது அவள் உபயோகிக்கும் வார்த்தைகள் உங்களுக்குத் தெரியுமா? அதன் அர்த்தம் உங்களுக்குப் புரியுமா? கெட்ட வார்த்தைகளில்லவா திட்டுகிறாள். இதையெல்லாம் கவனித்துக்கொள்ள உங்களுக்கு நேரமில்லையே. உங்களுக்குத் தேவை வேலை, பணம் இரண்டும்தானே". வார்த்தைகளைச் சரமாரியாகப் பொழிந்தான் ஜனா. ஏதோ பேசவந்த பஞ்சலிங்கம் வார்த்தையை நிறுத்திக் கொண்டார். அருகில் நின்ற குழந்தைகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இதோ நிக்கிறானே என் தம்பி இவன் அம்மா, அப்பா சகோதரங்கள் இருந்தும் ஒரு அனாதையாக ஆயாவின் வீட்டில வளர்ந்தான் ஏன்? அவனைப் பார்க்க, பராமரிக்க உங்களுக்கு நேரமில்லை. காலையில வேலைக்குப்போனா மாலையிலதான் வீட்டுக்கு வாரீங்க. அதுவரை அந்தக் குழந்தை ஆயாவின் வீட்டிலதான். அந்தப்பிஞ்சு நெஞ்சம் பாசத்துக்காக எப்படி ஏங்கித் தவிக்குமென்று நினைச்சுப் பாருங்க." அவனது பேச்சும் ஆவேசமும் அதிகரித்துக் கொண்டே போனது. அப்போது அவன் அருகில் நின்ற அவனது ஆறுவயதுச் சகோதரன் அரைகுறைத் தமிழில் "நீங்க என்னை அந்த அன்ரி வீட்டில விட்டுட்டுப் போனதும் நான் உங்களை நினைச்சு ஒவ்வொருநாளும் அழுகிறநான்" என்றான். "பார்த்தீங்களா அம்மா, அப்பாவைக் காணவில்லையே என்ற ஏக்கம் இந்தக் குழந்தையின் மனதில் எவ்வளவு தூரத்திற்குப் பதிந்துவிட்டதென்று. ஆயிரம்பேர் வந்தாலும் ஒரு பெற்ற தாய், தந்தையிடம் கிடைக்கும் பாசம் வேற யாரிடமும் கிடைக்காது. அது உண்மையான பாசமாகவும் இருக்காது உங்களுக்கும் குடும்பம் பிள்ளைகள் இருக்கெண்டும் கொஞ்சமாவது நினைக்கனும். இது என் அப்பா, அம்மாவுக்கு மட்டும் சொல்லல்ல. உங்க எல்லோருக்கும்தான் சொல்றேன்." பேசப்பேச அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. எல்லோரையும் திரும்பிப் பார்த்தான் எவருமே பேசவில்லை. சிறிதுநேர அமைதியின்பின் " தம்பி ஜனா நீ என்ன பேசுறே ஏன் ஆத்திரப் படுறாய்" என்று கேட்டாள் சித்தி. "வேண்டாம் தடுக்காதீங்க ஜனா பேசுறதில என்ன தப்பிருக்கு நீங்கள் ஒவ்வொருத்தரும் செய்த காரியத்துக்கு ஆத்திரப்படாம என்ன செய்யிறது ஜனாவைப் பேசவிடுங்க." என்று தாயைத் தடுத்தாள் ஜனாவின் சித்திமகள் "இது ஆத்திரமில்லை மனவேதனை இவ்வளவு காலமும் என் மனசுக்குள்ள உறங்கிக் கிடந்த வேதனைகள், உண்மைகள்." ஜனாவின் குரல் தளுதளுத்தது ஆத்திரம் அழுகையாக மாறியது. இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பஞ்சலிங்கம் "பணம் பணம் எண்டு அலையிறதாச் சொன்னியே நாங்க இருந்த நாடுகள் அப்பிடி ரெண்டு பேரும் வேலைசெய்து உழைக்காட்டி குடும்பச்செலவு களைச் சமாளிக்க முடியாது."என்றதும் "மறுக்கல்ல நான் மறுக்கல்ல ஆனா உங்களுக்கும் குடும்பம் பிள்ளைகள் இருக்கெண்டு நினைக்கணும். மற்றக் கூட்டங்களைப் போல தாய் தந்தையின்ர அன்பு பாசம் வேணும் எங்களுக்கும் பாசம் வேணும். நாங்க உங்களிட்ட பணத்தைக் கேக்கல்ல பாசத்தைக் கேக்கிறோம். என்றைக்காவது நீங்க எங்களை நினைச்சுக் கவலைப் பட்டதுண்டா? இங்க வந்த பிறகும் உங்களைப் பத்தியும் நீங்க வெளிநாடுகளில வாழ்ந்த வாழ்க்கையையும் நினைச்சுத்தானே கவலைப்படுறீங்க....." தன் கண்களிலே நிரம்பியிருந்த கண்ணீரை ஜனாவினால் கட்டுப்படுத்த முடியவில்லை கைகளினால் வாயினைப் பொத்திக் கொண்டான். கன்னத்தில் வழிந்த கண்ணீர் அவன் கைகளை ஈரமாக்கியது.

ஜனாவின் உள்ளக் குமுறல்கள் அத்தோடு அடங்கிவிடவில்லை. சிறிதுநேரம் அமைதியாக இருந்தவன் தொடர்ந்தான் " வெளிநாடுகளிலை மற்றைய தமிழர்களோடு சேரக்கூடாது, பேசக்கூடாது என்று எங்களைத் தடுத்தீங்க ஏன்??? ஏன் அப்பிடி நடந்தீங்க இங்க வந்த பிறகுமா அப்பிடி இருக்கனும்? இந்த மனித வாழ்க்கையென்பது நீர்க்குமிழிபோல கொஞ்சக் காலம்தான் என்றுவரை இருப்போம், எப்போது இறப்போம் என்பது யாருக்குமே தெரியாது. அந்தக் குறுகிய காலத்துக்குள்ள ஏன் ஒருவரோட ஒருவர் ஒற்றுமையா, சந்தோஷமா இருக்கக் கூடாது? நீங்க இருந்த ஒவ்வொரு நாட்டுக்காரங்களையும் பார்த்தீங்களா எவ்வளவு ஒற்றுமையா இருக்கிறாங்க. நீங்களும் ஏன் அதே மாதிரி இருக்க முடியாது?" என்று தாயைப்பார்த்துக் கேட்டான் அவன். பதில் சொல்ல முடியாமல் திண்டாடிய மகேஸ்வரி " தமிழரோட ஒற்றுமையா இருக்கேலாது" என்றாள் பொதுவாக. "ஏன் முடியாது எல்லாரும் மனுஷங்கதானே இப்பிடியே நீங்க ஒவ்வொருத்தரும் சொல்லிக்கொண்டே இருந்தா எப்பிடி முடியும். எல்லோரும் இப்பிடி நினைச்சுக் கொண்டிருக்கிறதாலதான் முடியாம இருக்கு". என்று அவன் சொன்னதும் பஞ்சலிங்கம் அவனைப் பார்த்து "எத்தினை இனம், சாதி, சமயம் வேறான ஆக்கள் இருக்கினம் அவையளோட நாங்க எப்பிடி ஒற்றுமையா இருக்கிறது" என்று சொன்னதும் ஜனாவுக்கு ஆத்திரம் அதிகமானது அதேவேளை தந்தை சொல்வதைக் கேட்க சிரிப்பாகவும் இருந்தது. "ஆளுக்கொரு சாதி, இனம், மதம் எண்டு பாக்கிறீங்களே ஏன்??? எல்லோரும் மனுஷங்கதானே இதை ஏன் நீங்க புரிஞ்சுகொள்றதில்லை. ஒவ்வொரு தொழில் செய்பவனையும் ஒவ்வொரு சாதியை வைச்சு இழிவாப் பேசுறீங்களே அதே வேலையை நீங்க உங்க வீடுகளில செய்யிறதில்லையா? ஏன் மற்றவனை

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம். சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்
உலக தமிழ்ப்பத்திரிகை/சஞ்சிகைகள் நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம்!

சர்வதேச தமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர் கடிதங்கள் மிகவும் வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம், ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்தி வெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ISSN:0805-7443 SARVADESA TAMILER 15,-Nkr Vol.2;Nr.8;Sept-Oct. 1995

**BLAD**

சர்வதேசதமிழர்

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

Subscription/yr/6 issues:: Scandinavia:90,-NKr;Srilanka/India:6USD;U.K.:6£;France:30Fr;Germany:12DM;
Canada:10CD;Swiss:12Fr;Australia:12AD;K.S.A.:20SR;Singapore/Malaysia:12SD;Others::10 USD
Postgiro:0823 0899 453 ,Postbanken,0021 Oslo Bankgiro:6066 1012 199,kredit kassen bank,3000 Drammen

*Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet .*

மட்டும் இழிவாப் பேசுறீங்க? அவன் பிச்சையெடுக்கவில்லை, களவெடுக்கவில்லை, மற்றவனை ஏமாற்றிப் பிழைக்கவில்லை உழைத்துச் சாப்பிடுகிறான். வெளிநாடுகளலை பாருங்க ஒவ்வொரு தொழிலையும் எப்பிடி மதிக்கிறாங்க எண்டு. எந்த வேலையையும் தொழில் எண்டுதான் அவங்க மதிக்கிறாங்க ஆனா நீங்க....... ஒரு நிமிஷம் நினைச்சுப் பாருங்க நீங்க வெளிநாடுகளில செய்த வேலையை. அப்பா வேலைசெய்தது மீன் தொழிற்சாலை, அம்மா வேலைசெய்தது ஹோட்டலில துப்புரவுசெய்யிற வேலை. உங்களை நாங்கள் எந்தச் சாதிப் பெயரை வைச்சு அழைக்கிறது. நீங்க செய்தவேலையை குறைவாகவோ, இழிவாகவோ நான் பேசல்ல நீங்களே அந்த வேலையைச் செய்துகொண்டு ஏன் மற்றவனை சாதி குறைவாப் பாக்கிறீங்க. முதல்ல உங்களை நீங்களே உணர்ந்து கொள்ளுங்க. உதவி செய்யாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாதிருங்க. மற்றவன் மனதைப் புண்படப் பேசாதீங்க. ஒருநாள் நிமலரூபன் மாமாகூட எங்க வீட்டுக்கு வந்து உங்களோட சாதியைப்பற்றிக் கதைச்சார் ஆனா அவர் வேலைசெய்தது ஒரு மீன் தொழிற்சாலை அவர் சித்தப்பா வேலைசெய்ததும் ஒரு மீன் தொழிற்சாலை. ஏன் அவர் அக்கா, அத்தான் வேலைசெய்ததுகூட மீன் தொழிற்சாலைதான் அதை அவர் சிந்திக்கேல்ல சாதியைப் பற்றிப் பேசுறார். சாதிவேற்றுமை பாக்கிறீங்களே சைவசமயக் கடவுள்களில் ஒருவரான முருகன் குறத்தி இனத்தைச் சேர்ந்த வள்ளியைத் திருமணம் செய்தாரே சாதிவேற்றுமை பாக்கிற நீங்க ஏன் முருகனை நாள்தோறும் கைகூப்பி வணங்கிறீங்க? அவன் சாதி குறைஞ்சவனல்லவா? நான் நாஸ்திகனில்லை கடவுளைக் குறைவாகவும் பேசல்ல. ஏன் கடவுளுக்கு நீங்க சாதி பாக்கிறதில்லை? எந்தக் கடவுளும் சாதிபாக்கிறதுமில்லை உங்களுக்குச் சொல்லித் தரவுமில்லை. ஆனா மனிதனாப் பிறந்த நீங்க ஆளுக்கொரு சாதி, இனம், மதம் எண்டு பாக்கிறீங்க, அடிபட்டுச் சாகிறீங்க. நாம் எல்லோருமே ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் என்று கிறிஸ்தவமதம் சொல்லுதே அப்போ நீங்க எல்லோருமே உறவினர்கள்தானே எப்படிச் சாதிப்பிரிவினை பார்க்க முடியும்.

இன்று பல நாடுகளில யுத்தம் உண்டாகிறதுக்கு முக்கிய காரணங்களில ஒண்டு மதப்பிரிவினை எண்டு மதம்பிடித்துத் திரிபவர்கள். இந்தியாவில பம்பாயில ஒரு சம்பவம் நடந்தது உங்களுக்கு நினைவிருக்கும். அந்தக்கொடுமையான சம்பவம்கூட இந்து, முஸ்லிம், என்ற சமயப் பிரிவாலதான் வந்தது. இந்தப் பூமியில எங்களைப்போல வாழப்பிறந்த எத்தனைபேர் அதில பலியானாங்க. எத்தனை ஒன்றுமறியாத பிஞ்சுக்குழந்தைகள் பலியானாங்க இதெல்லாம் ஏன்?? எதுக்கு? அந்தச் சம்பவங்களைப் பார்த்தும், கேட்டும் என்றாலும் நீங்க திருந்தக் கூடாதா?" பேசப்பேச ஜனாவின் ரத்தம் கொதிப்பேறி முகம்சிவந்து கண்களிலே கண்ணீர் நிரம்பி கன்னத்தில் வழிந்தது. எவருமே வாய்திறந்து பேசவில்லை. எல்லோரும் இடியோசைகேட்ட நாகம்போலத் திகைத்து நின்றனர். ஒரு ஊசி விழுந்தால்கூட சத்தம் கேட்குமளவிற்கு அங்கே மயான அமைதி நிலவியது. ஜனாவின் அருகில் நின்ற மற்றைய குழந்தைகளும் அவனது பேச்சில் நியாயமிருப்பதை உணர்ந்தனர். எல்லோரும் தமது தாய், தந்தையை வெறுப்புடன் பார்த்தனர் அவர்கள் தலையைக் குனிந்து கொண்டனர். ஜனாவுக்கோ மேலும் மேலும் பேச வேண்டும் என்ற ஆவேசம் மனதில் எழுந்தது.

நீங்களெல்லாம் மனிதனாகப் பிறந்து இதுவரை என்ன சாதிச்சீங்க??? உங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் போட்டி, பொறாமை, கத்தி, கடப்பாறை, குத்து, வெட்டு, எல்லைச்சண்டை, சாதி, இன, மத, மொழிச்சண்டை இவைகளைத் தவிர வேற எதைக் கண்டீங்க. அதிலையே நீங்க வாழ்ந்திட்டீங்க வேண்டாம் எங்களுக்கு அது வேண்டாம் எங்களையும் அப்பிடிப் பழக்க வேண்டாம் எங்களையாவது வாழவிடுங்க. ஒரு மனிதன் பிறந்து எத்தனை வயதுவரை உயிரோட வாழ்ந்தான் என்பது முக்கியமில்லை. அவன் இறந்தபின்பும் மற்றவனுடைய மனதில் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம் அதை மறந்திடாதீங்க......." என்று ஆவேசம் கொண்டவனாய்ப் பேசினான் அவன். அவன் பேசிய உண்மைகளும், கேட்ட கேள்விகளும் அனைவரையும் தலைகுனிய வைத்தது. அவனைச் சுற்றிநின்ற அனைத்துக் குழந்தைகளின் மனதிலும் சந்தோஷம் மேலிட்டது. அதே வேளை தமது தாய், தந்தையை நினைக்க, நினைக்க வெறுப்பாகவும் இருந்தது. சில விநாடி அமைதியின் பின் பஞ்சலிங்கம் மெதுவாக "தம்பி ஜனா நான்சொல்றதையும் கொஞ்சம்........" என்று அவர் தொடங்க ஜனா தனது கைகளிரண்டையும் கூப்பி " போதும்....... போதும்......... நீங்க இதுவரை சொன்னது செய்தது எல்லாமே போதும் தயவுசெய்து எங்களை வாழவிடுங்க. உங்களைத் திருத்த முடியாது நான் இதுவரை சொன்னதெல்லாம் உங்க ரத்தத்தில ஊறிட்டுது நீங்க திருந்தவே மாட்டீங்க எந்த ஜென்மத்திலும் திருந்தப் போறதில்லை எங்களையாவது திருந்தி வாழவிடுங்க. நீங்கதான் இதுவரை மனிதனா வாழல்ல வெளிநாடுகளிலும் எங்களைத் தமிழனா வாழவிடல்ல அப்பிடி வளர்க்கவுமில்லை. இங்கையாவது எங்களை மனுஷனா வாழவிடுங்க... எங்களை வாழவிடுங்க......" என்று அவன் தனது கைகளைக் கூப்பிக் கெஞ்சிக் கேட்டபோது அனைவருக்குமே அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அன்பான தமிழர்களே! நல்லெண்ணத்துடன் சந்தா தந்துதவியமைக்கு இதயபூர்வமான நன்றி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்